www.padippakam.com

# இந்திய கம்யூனிசத்திற்கு நேர்ந்த அவலம்

-கே. தாமோதரன்-

ஜூலை 7, 1986.

படிப்பகம்

www.padippakam.com



ஆகவே அகநிலைக் குறைபாடுகள் இருந்ததை நாம் புறக்கணித்து விடக்கூடாது என்னும் அதே நிலையில் மேலும் ஆழமாக நாம் பார்க்க வேண்டியுள்ளது. அப்படிப் பார்த்தால்தான் இந்தியக் காங்கிரஸ் போன்றதொரு வலுவானதும் நிலையானதுமான முதலாளிய தேசநாயகக் கட்சி நிலவியதற்குப் புறநிலை அடிப்படை இருந்ததை நாம் கண்டு கொள்வோம். இந்திய முதலாளி வர்க்கத்தின் வளர்ச்சியதான் அது. இது தரகு முதலாளி வர்க்கமாக இருக்கவில்லை. ஆங்கில ஆட்சி முழு மலர்ச்சி பெற்றிருந்த காலத்திலேயே இவ்வர்க்கம் ஓரளவு சுயேட்சையுடன் செயல்பட்டதாகும். ஏகாதிபத்தியங்களுக்கிடையில் நடந்த போர்களில் பிரிட்டன் ஈடுபட்டுக்கிடந்த காலத்தில் இந்திய முதலாளிகள் எப்போதுமில்லாத துரித வளர்ச்சி பெற்றார்கள். இந்த முதலாளி வர்க்கமும், இந்தியர் பலரைக் கொண்ட ஒரு பணித்துறையும், ராணுவமும் இருந்ததாலேயே காலனிய அரசு யந்திரம் இயங்க முடிந்தது. இந்த யந்திரம் தன் உறுப்புகளுடன் காங்கிரசைக் கட்டிப்போடுவதில் வெற்றி பெற்றது. இதனால்தான் சுதந்திரம் பெறும் வேளை வந்ததும் ஆட்சிக் கைமாற்றம் சுமுகமாக நடந்தேறியது. ஆக இந்தியக் கம்யூனிஸ்டுகள் முதலாளி வர்க்கத்தின் ஒரு பிரத்தியேகப் பொருளாதார அரசியல் கட்டமைப்பை எதிர்பட்டார்கள். ஆனால் அதை அவர்கள் ஒருபோதும் சரியானபடி ஆய்வு செய்யவில்லை.

1934–5ல் முறைப்படி சிபிஐ நிறுவப்பட்டதிலிருந்து அதன் வளர்ச்சி சீரற்ற முறையிலேயே ஏற்பட்டது. உதாரணமாக கேரளாவில் முதல் கம்யூனிஸ்ட் குழு 1937ல்தான் ஐந்து தோழர்களால் அமைக்கப்பட்டது. அவர்களில் நம்பூதிரிபாடு, கிருஷ்ணப்பிள்ளை, நான் ஆகியோரும் இருந்தோம். நாம் நம்மைப் பகிரங்கமாகக் கம்யூனிஸ்ட் கட்சி என அழைத்துக் கொள்ளக் கூடாது; மாறாக காங்கிரஸ் சோசலிஸ்டுகளிடையே நமக்கொரு தளத்தை வென்றெடுக்க வேண்டும், என நாங்கள் தீர்மானித்தோம். (இது சரியென்றே நான் நினைக்கிறேன். ஆனால் இது தேச அளவில் நடக்கவில்லை.) அதன்படி காங்கிரஸ் சோசலிஸ்டுக் கட்சிக்குள் கம்யூனிஸ்டு இலக்கியத்தைப் பரப்பினோம். காங்கிரஸ் சோசலிஸ்டுக் கட்சி காங்கிரசுக்குள் ஒரு ஒழுங்கமைக்கும் குழுவாக இயங்கிவந்தது. கேரளக் காங்கிரசுக்குள் எமக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. நம்பூதிரிபாடு, ஏ.கே. கோபாலன், கிருஷ்ணப்பிள்ளை–பிற்பாடு நான் எல்லோரும் கேரளக் காங்கிரசின் பிரபல தலைவர்களாகயிருந்தோம். முன்னணிச் செயற்குழுக்களில் நாங்கள் பதிதவி வகித்தோம். காங்கிரசுக்குள் எமக்கிருந்த அந்தஸ்தைப் பயன்படுத்தி தொழிற்சங்கங்கள், உழவர் சங்கங்கள், மாணவர் சங்கங்கள், ஏகாதிபத்திய எதிர்ப்பு–முற்போக்கு எழுத்தாளர் சங்கங்கள் போன்றவற்றை நாங்கள் அமைத்தோம். 1939 இறுதியில்தான் கேரளாவில் கிரமமான கம்யூனிஸ்ட் கட்சி உருவாகியது. எமது மக்கள் பணியும், மக்களின் தேசிய அபிலாசைகளுடன் எங்களை நாங்கள் இணைத்துக் கொண்டோம் என்பதும்தான் சுதந்திரத்துக்குப்பின் கேரள, கம்யூனிசத்தின் முக்கியமான கோட்டைகளில் ஒன்றாக விளங்கியதற்கு குறிப்பிடத்தக்க பங்காயிற்றியது

கேள்வி:–கம்யூனிஸ்டு என்பதற்காக நீங்கள் முதன் முதலாகக் கைதானது எப்போது?

பதில்:– 1938ல். அப்போது நான் கட்சி உறுப்பினராயிருந்தேன். ஆனால் மக்களின் பார்வையில் நான் அப்போதும் தேசியப் போராட்டக்காரனாகவே கருதப்பட்டேன்.

படிப்பகம்

www.padippakam.com



# இந்திய கம்யூனிசத்திற்கு நேர்ந்த அவலம்

கே. தாமோதரன்

கேள்வி :- இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி(சிபிஐ) இந்தியாவில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள நீண்டகாலம் பிடித்ததுபற்றி என்ன நினைக்கிறீர்கள்? ஆரம்ப காலத்தில் அதன் செயல்பாடுகள் யாவை? அன்று தேசிய இயக்கத்துடன் அதன் உறவுகள் எப்படி? இயக்கமாகிய பிரதான நீரோட்டத்திலிருந்து இந்தியக் கம்யூனிஸ்டுகளை ஒரு முக்கியமான தருணத்தில் தனிமைப்படுத்தித் திசைமாற்றியது மூன்றாம் அகிலத்தின் (கோமிண்டர்ன்) பெயர்போன 'மூன்றாவது காலகட்டமே' என்பது உண்மைதானா?

பதில் :- கட்சி பற்றிய எனது சொந்த அநுபவம் இக்கால கட்டத்தில் கேரள அளவிலேயே இருந்தது. எனவே நான் அந்த அளவிலேயே கருத்துச் சொல்ல முடியும். என்றாலும் நாடு முழுவதுமே கட்சிப் போக்கு சாரத்தில் ஒன்றுபோலவே இருந்தது. 1934-ல் பம்பாயில் குறிப்பாக துணியாலைத் தொழில்துறையில் ஏற்பட்ட வேலைநிறுத்த எழுச்சிகளுக்குப்பின் சிபிஐ தடைசெய்யப்பட்டது. அப்போதுதான் நான் கட்சியில் சேர்ந்துதேன். கட்சி தடை செய்யப்பட்டதால் கட்சிப் பிரசுரங்களைக்கூட ஒழுங்காக விநியோகிக்க முடியாத நிலை. இந்நிலையில் ஒழுங்கான உட்கட்சி விவாதம் என்ற பேச்சுக்கே இடம் இருக்கவில்லை. அக்காலத்தில் தேசிய அளவில் பார்த்தால் சிபிஐ மிகச்சிறிய அமைப்பாகவே இருந்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். உண்மையில் 'மூன்றாம் காலகட்டத்தின்' மோசமான விளைவுகளுக்குப் பின்னர் 1935-6ல் தான் சிபிஐ ஒரு தேசிய அளவிலான அரசியல் சக்தியாக வளரத் துவங்கியது. 20 களிலும், 30களின் ஆரம்பத்திலும் பிரதேச அளவில் நிலவி வந்த கம்யூனிஸ்டுக் குழுக்களைத் திசை பிறழச் செய்ததில் நிச்சயம் மூன்றாம் அகிலத்தின் அரசியலுக்கு முக்கியமான பங்கு உண்டுதான். இந்திய முதலாளி வர்க்கம், அதன் அரசியல் கருவியான இந்தியக் காங்கிரஸ் ஆகியவற்றுக்கிருந்த ஒப்பளவு சுயேச்சை நிலையை மூன்றாம் அகிலத் தலைவர்கள் குறைத்து மதிப்பிட்டனர். தேசிய இயக்கத்தை ஏகாதிபத்தியத்துடன் இணைத்துக் கூறிக்கொண்டிருந்தனர். காலனியப் பிரச்சனைகளில் ஸ்டாலின் சொல்விளம்பியான குசினெனும் Inprecor -என்ற ஏட்டில் எழுதி வந்த பலரும் இந்தியத் தேசிய காங்கிரசை ஏகாதிபத்தியச் சார்பான எதிர்புரட்சிச் சக்தி என்று கூறுமளவிற்குச் சென்றனர். காங்கிரஸ் சோசலிஸ்டுகள் (2) 'சமூகப் பாசிஸ்டுகள்' என முத்திரை குத்தப்பட்டனர். 20களின் பிற்பகுதியிலும், 30 களிலும் தேசியத் தலைவர்கள் மீது தொடுக்கப்பட்ட வசைத் தாக்குதல்கள் அதி இடதுபாலியிலிருந்தன. இந்தியாவிலிருந்த வெவ்வேறு கம்யூனிஸ்டுக் குழுக்கள் இப்பழியுரைகளை கிளிப்பிள்ளைகள் போல் திருப்பி ஒப்பித்தன. என்றாலும் முழுத் தவறையும் அகிலத்தின் மீதே சுமத்திவிடவும் முடியாது. மூன்றாம் அகிலத்தின் அறிவுரையால் சீனக் கட்சியும் தான் தவறியது. ஆனால் அவர்கள் அதிலிருந்து மீண்டு இறுதியில் ஆட்சியையும் பிடிக்கவில்லையா?

படிப்பகம்

www.padippakam.com



திருவானந்தபுரத்தில் இளைஞர் சங்க மாநாடு ஒன்றில் நான் ஆற்றிய உரைதான் நான் கைதாகக் காரணமாகும். அக்கூட்டத்துக்கு என்னைத் தலைமை தாங்கச் செய்திருந்தார்கள். துவக்கவுரையில் ஏகாதிபத்தியத்துக்கெதிராக வசைபாடினேன். திருவாங்கூர் "மகாராஜாவை" ஒடுக்குமுறையின் மொத்தவடிவம் என்றும், அவ்வொடுக்கு முறையை மக்கள் மீது பிரயோகிப்பது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் என்றும் பேசினேன். மாநிலக்காங்கிரசின் வலதுசாரித் தலைவர்கள் "மகாராஜா" கண்ணியமான மனிதர். அவரது வட்டாரப் பிரதிநிதிகள்தான் அவருக்குத் தவறான வழிகாட்டுகிறார்கள். எனவே அவர்களே கண்டிக்கப்பட வேண்டியவர்கள்." என்று சொல்லி வந்தார்கள். இந்த மடத்தனமான கருத்தை நான் நேருக்கு நேர் தாக்கினேன். பிரெஞ்சு, ரஷ்யப் புரட்சிகளின் அனுபவங்களை எடுத்தாண்டேன். அவர்கள் முடியாட்சிப் பிரச்சனையைக் கையாண்ட முறைகள் காங்கிரஸ் தலைவர்களின் முறைகளினும் பயனார்ந்தவை என்பதை அவதானித்துச் சொன்னேன். போராட்டத்தில் விவசாயிகளும் தொழிலாளிகளும் கலந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை கூட்டத்திடம் விளக்கி விட்டு 'புரட்சி நீடூழி வாழ்க' என்ற முழக்கத்துடன் பேச்சை முடித்தேன். கூட்டத்தினர் அனைவரும் இம்முழக்கத்தை ஆனந்தமாய் அங்கீகரித்தனர். அன்றே திருவனந்தபுரத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும், போலிசாருடன் மோதல்களும் நிகழ்ந்தன. மறுநாள் காலை நான் இளைஞர் சங்கத் தலைவர்வர்களுடன் கைது செய்யப்பட்டேன். இரண்டு மூன்று மாதங்கள் சிறைவாசம். பின் விடுவிக்கப்பட்டோம். அதிலிருந்து சிறைவாழ்க்கை எனது வாழ்வின் கிரமமான பகுதியாயிற்று.

கேள்வி:- சோவியத் நாட்டில் ஏற்பட்டு வந்த வளர்ச்சிகள் இந்தியக் கம்யூனிஸத்தின் மீது ஏற்படுத்திய தாக்கம் பற்றி சுருக்கமாக விளக்குவீர்களா? நாம் விவாதித்து வரும் இக்கால கட்டம் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகும். புரட்சியின் போதிருந்த போல்ஷிவிக் தலைமையை ஏறக்குறைய முழுமையும் ஸ்டாலின் பயங்கரத்தால் அழித்தொழிக்கப்பட்டது. அதையடுத்து அதிகார வர்க்கச் சர்வாதிகாரம் துவங்கியது. இவ்வர்க்கம் பொதுவாழ்வின் எல்லாத் துறைகளிலும் தன் ஏகபோகத்தை நிறுவியது. இவையெல்லாம் இந்தியக் கம்யூனிஸ்டுகள் மேல் ஏற்படுத்திய பாதிப்பு பற்றிக் கூறுவீர்களா?

பதில்:- என்னைப் பொறுத்தவரை நான் முதன்மையாய் கேரளா பற்றியே பேச முடியும். அந்த சமயத்தில் நான் அனைத்திந்திய கட்சியமைப்புன் உறுப்பினனல்ல. நாட்டின் பிறபகுதிக் கட்சி உறுப்பினர்களுடன் படர்ந்த தொடர்பு கொள்வதை சூழ்நிலைகள் அனுமதிக்கவில்லை. மூன்றாம் அகிலத்தின் ஏழாம் காங்கிரசில் 'மக்கள் முன்னணிப் போர்த் தந்திரம்' என்ற ஆய்வுரையைத் திமித்ரோவ் சமர்பித்தார். அதற்குச் சிறிது காலத்துக்கு முன்புதான் நான் கட்சியில் சேர்ந்தேன். ஏழாம் காங்கிரசுக்குப் பிறகுதான் ஸ்டாலின் இந்தியாவில் 'பெருந்தலைவர்' என்று பிரபலியமடைந்தார். இந்த ஆய்வுரைகள் பிரிட்டிஷ்சாருக்கு எதிராக காங்கிரசுடன் (பிந்தியாவது) ஐக்கிய முன்னணி அமைக்கும் தேவைக்குப் பொருந்தி வந்தன. 1929- 1929-34 காலகட்டக் குறுங்குழு வாதமும், அதி இடதுவாதமும் எம்மை தனிமைப்படுத்தி இருந்தது. இந்த ஐக்கிய முன்னணி யோசனை, தவறுகளைத் திருத்திக் கொள்ளும் முயற்சியாகப் பார்க்கப்பட்டது. எனவே இது சரியான திசையில் ஒரு படி முன்னேறுவதாகும் என நினைத்தோம். கேரளாவில் விட பம்பாயில்

படிப்பகம்

www.padippakam.com



கேரளாவைவிட பம்பாயிலும், கல்கத்திதாவிலும் இது மூலக்கமாய் தெரிந்தது. ஏனெனில் 30களின் ஆரம்பத்தில் கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சி இருக்கவில்லை. 'பம்பாயுடன் ஒப்பிடும்போது தொழில் மயமாகியிராத் கேரளாவில் சிபிஐ வலுப்பெற்றது எப்படி என மக்கள் என்னிடம் கேட்கும்போது அவர்களுக்கு நான் தரும் பதில், 1930-32ல் கேரளாவில் சிபிஐ இல்லை என்பதாகும். எனவே அதைப் புதிதாய் துவங்குதல் சாத்தியமாயிற்று. இன்று கேரளாவிலுள்ள கம்யூனிஸ்டுத் தலைவர்களில் பெரும்பாலார் 1930-32ல் காங்கிரஸ் துவக்கிய சட்ட மறுப்பு இயக்கத்தில் முற்றாக ஈடுபட்டிருந்தவர்கள். இது மக்களிடம் அவர்கள் ஆதரவு பெற்றது எவ்வாறு என்பதையும் பிறபாடு காங்கிரஸ் கட்சியின் ஏக போகத்தை அவர்களால் உடைத்தெறிய முடிந்தது எவ்வாறு என்பதையும் தெளிவாக்குகிறது.

ஆனால் உங்கள் கேள்விக்கு வருவோம்- இந்தியக் கம்யூனிஸ்டுகள் தீவிர கவனமெடுத்து மார்க்சியத்தை ஆழ்ந்து கற்றவர்கள் அல்லர் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு உதாரணம் சொல்கிறேன். காலனியப் பிரச்சனை பற்றிய லெனினின் ஆய்வுகள் பற்றி 1950 களின் இறுதி வரை இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்குத் தெரியாது-போதுமா? மேலும் இந்தியாவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணி பற்றிய ஏழாம் காங்கிரசின் பாதை ஆறாம்காங்கிரசின் பாதையிலிருந்து முறித்துக் கொள்வதாகப் பார்க்கப்படவில்லை. அதன் தொடர்ச்சியாகவே பார்க்கப்பட்டது. தேசிய, சர்வதேசியச் சூழ்நிலையில் ஏற்பட்ட மாற்றங்களுக்காகத் தேவைப்பட்ட செயல்தந்திர மாற்றமாகவே அது விளங்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில்தான் ஆறாம் காங்கிரசின் கேடு பயக்கும் காலனிய ஆய்வுரைகள் மலையாளத்திலும் பிற இந்திய மொழிகளிலும் பெயர்க்கப்பட்டன என்பதை அறிய உங்களுக்கு விநோதமாகப் படலாம். ஆனால், நடப்பில் ஐக்கிய முன்னணி என்பது இடது குறுங்குழுவாதப் பாதையில் இருந்து முறித்துக் கொள்வதாக இருந்தது. பி.சி.ஜோஷியின் தேர்ந்த தலைமையின் த கீழ் கட்சி செயல்படுத்திய புதிய பாதை, துரிதமாய் நாங்கள் முன்னேற உதவியது. முதல் தடவையாக சிபிஐ ஒரு அரசியல் சக்தியாக, காங்கிரசிலும், காங்கிரஸ் சோசலிஸ்டுகளிடையிலும் மக்கள் இயக்கங்களிலும் கணிசமான செல்வாக்குப் பெற்றது. போட்டித் தொழிற் சங்கங்கள் எல்லாம் அனைத்திந்தியத் தொழிற்சங்கக் காங்கிரஸ் ( ) என்ற ஒரே தொழிற்சங்கமாக்கப்பட்டது. இதில் சிபிஐ தலைமைச் சக்தியாயிற்று. அனைத்திந்திய உழவர் சபை ( ) அனைத்திந்திய மாணவர் கூட்டமைப்பு ( ) அனைத்திந்திய முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ( ) ஆகியன உருவாக்கப்பட்டன. அவற்றை ஒன்றிணைப்பதிலும் அவற்றின் போராட்டங்களை முன்னெடுப்பதிலும் கம்யூனிஸ்டுகள் முக்கிய பங்காற்றினர். ஏகாதிபத்தியத்திற்கு எதிராக தேசிய ஒற்றுமை, வலதுசாரிகளின் சமரச, போராட்ட எதிர்ப்புக் கொள்கைகளுக்கெதிராக இடதுசாரிகளின் ஒற்றுமை, இடது ஒற்றுமையைப்பலப்படுத்துவதற்காக சோசலிச ஒற்றுமை, சிபிஐ.யே சோசலிச ஒற்றுமையின் அடிப்படை, ஏகாதிபத்திய எதிர்ப்பு ஐக்கிய முன்னணியைக் கட்டிப் பலப்படுத்துவதற்காக மக்கள் அமைப்புகளும், மக்கள் போராட்டங்களும் இவையே புதியபாதையின் முழக்கங்களும், உடன்பாட்டுக் கூறுகளுமாகும். இந்தப் பாதை நிச்சயமாகப் பலன் தந்தது.

படிப்பகம்

www.padippakam.com



அனைத்திந்திய கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டி வலுப்படுத்த இது உதவியது. கட்சி உறுப்பினர் எண்ணிக்கை 1934-ல் சுமார் 150 ஆக இருந்தது. 1939-ல் 3000க்கும் அதிகமாயிற்று. அதன் செல்வாக்கோ மேலும் விரைவாக வளர்ந்தது. ஆனால் இவ்வாண்டுகள் ஸ்டாலினியத்தின் ஆண்டுகளாகும்.

"ஸ்டாலினே நாது 'பேராசான்', அவரே சோவியத் தநாட்டில் சோசலிசம் காட்டுகிறார். உலக சோசலிசத்தின் தலைவர் அவரே" என எங்களுக்குச் சொல்லப்பட்டது. நான் கம்யூனிசத்துக்குப் புதியவன். மேலும் மார்க்சியம்-லெனினியத்தை அதிகம் கற்றுத் தேராதவன். எனவே எனக்குச் சொல்லப்பட்டதை அப்படியே ஏற்றுக் கொண்டேன். அரசியல் குருமார் பாமர மக்களுக்கு ஞானஒளி புகட்டுவது இந்திய அரசியல் மரபு. இம்மரபுடன் ஸ்டாலினியத்தின சரியாகப் பொருந்தியது. எனவே கட்சி மூப்பர்கள் சொல்லும் எதையும் ஏற்றுக் கொள்ளும் நிலையில் நாங்கள் இருந்தோம். மூப்பர்கள் தமக்குத் தேவையான தவல்களுக்கு முழுக்கவும் மாஸ்கோவைச் சார்ந்திருந்தார்கள். இதுவே நான் கம்யூனிஸ்டாக வளர்ந்த சூழல். இருப்பினும் மாஸ்கோவிலிருந்து வந்த படுகொலைச் செய்திகள் கேட்டு மிகவும் கலங்கின தோழர்களும் இருந்தனர். சிபிஐ.யை கௌண் கட்ட உதவுவதற்காக பிரிட்டனிலிருந்து அனுப்பப்பட்ட கம்யூனிஸ்டுகளில் ஒருவரான பிலிப் ஸ்பிராட் மிகவும் மனமுடைந்தும் ஸ்டாலினியத்தில் நம்பிக்கையற்றும் போனார். இறுதியில் கம்யூனிசத்தையே கைவிட்டுத் தாராளவாத மனிதாபிமானி ஆனார். கடைசிக்காலத்தில் கம்யூனிச எதிர்ப்பாளராகவும் மாறினார். ஆரம்பகாலத்தில் எமக்கு உதவுவதில் மதிப்பரிய பங்காற்றின நல்லதோர் தோழர் அவர். மாஸ்கோ 'களையெடுப்புகள்' பற்றி காங்கிரசின் இடதுசாரிகளும் மிக விமர்சன முகம் காட்டினர், அவர்கள் தலைவர்களில் சிலர் சிபிஐ முன்னணியின் இதழான 'தேசிய முன்னணியின்' பிரச்சாரம் கண்டு மிகவும் வெறுப்படைந்தனர். 'தேசிய முன்னணி' டிராட்ஸ்கியை 'நச்சுப்பாம்பு' என்றும் 'பாசிசத்தின் கைக்கூலி' என்றும் சித்திரித்தது. ரஷ்யப் புரட்சியையும் சோவியத்தின் சாதனைகளையும் பிரபலப்படுத்திய காங்கிரஸ்காரர்களில் ஒருவரான நேருவே, 1938ல் நடந்த களையெடுப்புகள் பற்றி தன் இசைவின்மையை வெளியிட்டார். ஆனால் கம்யூனிஸ்டுகளாகிய நாங்களோ டிராட்ஸ்கியவாதிகளும் பாசிசமும் ஒன்றே என்றோம். ஸ்டாலினின் களையெடுப்புகளுக்கு பலியான புகாரின், லினோவியல், ராடக் போன்றோர் சோசாலிசத்தின் எதிரிகள் என்றும் ஏகாதிபத்தியத்துக்கும் பாசிசத்துக்கும் சேவை செய்த ஒற்றர்கள், நாசகாரர்கள் என்றும் நானும்தான் நம்பினேன். கட்டற்ற சிந்தனை கொண்ட சோசலிஸ்டுகளுடன் விவாதிக்கும்போது நான் வன்மையாக ஸ்டாலின் பக்கம் வாதாடினேன். இதற்கு முக்கிய காரணம் நாங்கள் சோவியத்த நாட்டுடன் எங்களை முழுமையாக ஒருமைப்படுத்திக் கொண்டதுதான் எனக் கருதுகிறேன். சோவியத் நாடோ அப்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளாலும் காங்கிரசிலிருந்த வலதுசாரிகளாலு? தொடர்ந்து தாக்கப்பட்டு வந்தது. ஒவ்வொரு வேலை நிறுத்தத்தையும் தூண்டுவது மாஸ்கோவே, ஒவ்வொரு ஆர்ப்பாட்டத்தையும் நடத்துவோர் மாஸ்கோவிடம் சன்மானம் பெறுவோரே என்று அவர்கள் கருதினர். இவர்களுக்கு எதிராகவே நாங்கள் சோவியத் தரப்பை ஆதரித்தோம்-விமர்சனபூர்வமற்றுத்தான்! இடதுசாரிகளால் சோவியத்நாடு விமர்சிக்கப்பட்ட போது [illegible]

படிப்பகம்

www.padippakam.com



இன்று திரும்பிப் பார்க்கும் போது, இதெல்லாம் எங்களுக்கு மட்டுமல்ல கம்யூனிஸ இயக்கம் முழுமைக்குமே நன்மை பயக்கவில்லை என உணர்கிறேன். டிராட்ஸ்கி பாசிசத்தை கடுமையாக எதிர்த்தார். ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் பாசிசப் பொறியில் விழுந்து விடக்கூடாதென எச்சரித்தார். இதே டிராட்ஸ்கியைத்தான் நாங்களும் எங்களைப் போன்ற ஆயிரக்கணக்கானோரும் பாசிஸ்டு என முத்திரை குத்தினோம் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? ஸ்டாலினியத்தைக் காப்பது ரஷ்யப் புரட்சியைக் காப்பதாகும் என நாங்கள் உண்மையாகவே நம்பினோம். டிராஸ்கி கொலை செய்யப்பட்டபின் கேரளாவில் நான் மலையாளப் பத்திரிகைகளில் ஸ்டாலினை ஆதரித்துக் கட்டுரை எழுதினேன். 'மாபெரும் சதி' என்ற நூலை சில சான்றுகளுக்காக-அல்லது சான்றுகள் என உண்மையிலேயே நான் நம்பியவற்றைத் தொகுப்பதற்காக-பயன்படுத்திக் கொண்டேன். இதெல்லாம் நினைவில் வருகிறது. 30களின் இறுதியில் வெளியான 'சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் (சிபிஎஸ்யு) அதிகாரபூர்வ வரலாறு' என்ற நூல் எனது ஸ்டாலின் நம்பிக்கையை உறுதிப்படுத்தியது. இந்நூல் மலையாளத்தில் பெயர்க்கப்பட்டு முதன்முதலில் 1941ல் சட்டவிரோதமாக வெளியாயிற்று. விரைவில் எமது ஊழியர்களுக்கு அது மார்க்சியப் பாடநூலாயிற்று. சிறையில் எங்கள் தோழர்களுக்கு நான் எடுத்த வகுப்புகள் ஸ்டாலினியச் சாயை படிந்திருந்தன. உண்மையில் ஸ்டாலினியத்தையே நாங்கள் மார்க்சியம்-லெனினியம் என நம்பிக்கொண்டிருந்தோம்.

கேள்வி :- போரைப் பற்றி சிபிஐ முதலில் மேற்கொண்ட நிலைபாடு யாது? எந்தச் சூழ்நிலைகளில் அது மாறியது? உங்கள் முன்னாள் தோழர்களில் ஒருவரான இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி (மார்க்சிஸ்டு) (சிபிஎம்) தலைவர் ஏ.கே.கோபாலன், தன் நூலில் 'போர்க்காலத்தில் சிபிஐ ஒரு மக்கள் கட்சியாயிற்று) என்கிறார். அவர் கருத்து சரியா?

பதில் :- எங்கள் கட்சியின் எதிர்வினை முதலில் போரை எதிர்ப்பதாகவே இருந்தது. 1939-க்கு முன்பே நாங்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தை மும்முரப்படுத்துமாறு காங்கிரசை வற்புறுத்தி வந்தோம். போர் துவங்கியவுடனே அதைச் செய்யத் தயங்கியது காங்கிரஸ்தான். 1940-ல் அனைத்திந்திய காங்கிரஸ் செயற்குழுவின் அமர்வு பூனாவில் நடந்தது. அதில் காந்தி கொண்டுவந்து நேருவும் ஆதரித்த மூலத்தீர்மானத்துக்கு நான் திருத்தம் கொண்டுவந்தேன் என்பது நினைவிலிருக்கிறது. காந்தியின் பாதையை எதிர்த்து, பிரிட்டிஷாருக்கு எதிரான புதிய மக்கள் போராட்டம் ஒன்றைத் துவக்கவேண்டும் என்ற கருத்தை நான் முன்வைத்தேன். இதுவே அப்போது சிபிஐ.யின் நிலைபாடுமாகும். விரைவில் நான் கைது செய்யப்பட்டு போர் முடிவுவரை சிறைவைக்கப்பட்டேன். பெரும்பாலான கம்யூனிஸ்டுகள் 'மக்கள் போர்' கொள்கையை(3) அமுல்படுத்துவதற்காக விடுவிக்கப்பட்டபோது, என்னை ஏன் விடுவிக்கவில்லை என்பதை விளக்குவது தேவையாகிறது.

போர் மூண்ட உடனேயும், அதற்கடுத்த ஆண்டிலும் கம்யூனிஸ்டுகள் பெரிய அளவில் கைது செய்யப்பட்டனர். நமது பாதை சரியா தவறா என்ற விவாதங்கள் சிறையில் துவங்கின. அப்போது சோவியத்நாடு நாஜிச் சேனைகளால் ஆக்கிரமிக்கப்பட்டது. இந்நிலையில் எமது சர்ச்சைகள் மேன்மேலும் சூடாகின. எங்களுடன் சிறையிலிருந்த பேராசிரியர் கே.பி.கிருஷ்ணன் 'மக்கள் போர்ப்' பாதையை வளர்க்கும் முகமாய்

படிப்பகம்

www.padippakam.com



எங்களுடன் சிறையிலிருந்த பேராசிரியர் கே.பி.கிருஷ்ணன்;மக்கள்போர்' ப் பாதையை வளர்க்கும் முகமாய் ஓர் ஆய்வுரைத் தொகுதியை எழுதினார். சோவியத் நாடு நாஜிச்சேனையால் ஆக்கிரமிக்கப்பட்டதும், நிலைமை முழுக்க மாறிவிட்டது என்றும்,எனவே கம்யூனிஸ்டுகள் தமது ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை, தமது போர் எதிர்ப்பை மூட்டை கட்டி வைத்துவிட வேண்டுமென்றும் அவர் கருத்து வைத்தார். நான் அதற்கெதிரான ஓர் ஆய்வுரைத்தொகுதியை எழுதினேன். சோவியத்நாடு வாழவேண்டுவது கீவாதாரமான விசயம்தான். ஆனால் ரஷ்யத் தோழர்களுக்கு உதவ மிகச் சிறந்த வழி,ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை விட்டு விடுவது அல்ல. மாறாக அதை மேலும் தீவிரப்படுத்துவது தான் சரி என்பது என்வாதம். நமது எதிரி இப்பவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே.

சிறையிலிருந்த கம்யூனிஸ்டுகளில் பெரும்பாலார் எனது பாதையை ஆதரித்தனர். மிகச் சிறுபான்மையரே 'மக்கள் போர்' ஆய்வுரையை ஆதரித்தனர். சில மாதங்களுக்குப் பிறகு பிரிட்டிஷ் கட்சி தனது பாதையை மாற்றிக் கொண்டதென்றும்,மாஸ்கோ அந்த மாற்றத்தை வழிமொழிகிறதென்றும் கேள்விப்பட்டோம். சிறைக்கு வெளியே கட்சிச் செயலர் பி.சி.ஜோஷி மக்கள் போர்ப் பாதையை வன்மையாய் எதிர்த்துக் கொண்டிருந்தவர்களுள் ஒருவர். மேற்படி அறிவிப்பின் அவரும் பாதை மாறவேண்டியதாயிற்று. போர் முயற்சிகளுக்கு உதவுவதன் முக்கியத்துவம் பற்றி கட்சி உறுப்பினர்களும் மக்களும் ஏற்கும்படிச் செய்ய தனது பேச்சுத்திறனைப் பயன்படுத்தத் துவங்கினார். பாதை மாறியதற்குப் பின்,போரை ஆதரித்த கம்யூனிஸ்டுகள் விடுவிக்கப்பட்டனர். ஆனால் நான் உட்பட்ட சிலர் சிறையிலேயே இருத்தப்பட்டோம். யாரை வெளியே விடவேண்டும் யாரை உள்ளே இருத்த வேண்டும் என்பது பிரிட்டிஷ் ஊளவாளிகளுக்கு நன்கு தெரிந்திருந்தது.

கேள்வி:- கம்யூனிஸ்ட் கட்சிக்குள் நடந்த விவாதங்களைப் பொறுத்தவரை சிறைக்கு வெளியிலிருந்ததைவிட சிறையில் அதிக ஜனநாயக சூழல் நிலவினதாகவும் அங்கு கட்சி உறுப்பினர் அனைவரும் தரவேறுபாடின்றி இவ்விதவிவாதங்களில் பங்கேற்றது மாதிரியும் உங்கள் பேச்சிலிருந்து தோன்றுகிறது-சரிதானா?

பதில்:- சரிதான் ஆனால் சிறைக்குள் வைத்து நடந்த விவாதங்களுக்கும் வரம்பிருந்தது. கட்சிப் பாதைக்கு நேரடியாக முரண்படாதவரைதான் விவாதம் நடைபெற்றது. உதாரணமாக,போர் விசயமாக ஒரு சுற்றறிக்கை கட்சித் தலைமையிடமிருந்து சிறையிலிருந்த எமது கட்சிக் குழுவுக்கு வந்து சேர்ந்தது. அதில் போரை ஆதரிக்கும் பாதையை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. உடனே நான் நானாகவே என் நிலைப்பாடுகளை விட்டு விலகிவிட்டேன். பிறர் என்னைப் பரிகசித்தனர். கட்சிக்கு நீதான் ஆசிரியர் என்ற நினைப்போ? உன் நினைப்பு தப்பு என்றனர். நாங்கள் கம்யூனிஸ்டுகளாகப் பயிற்றுவிக்கப்பட்ட லட்சணத்தை இந்தச் சம்பவம் குறித்துக் காட்டுகிறது. நான் 'சுயவிமர்சனம்' செய்து கொண்டேன். என் நிலைப்பாடு தவறுதான் என ஒத்துக் கொண்டேன், அதற்குக் காரணம் அமைப்பு எப்போதுமே தவறு செய்யாது, என்ற நம்பிக்கைதான். என்றாலும் மனதுள் சந்தேகங்கள் தொடர்ந்தன. என் நிலைப்பாடு சரிதான் என்பது பிந்தின ஆண்டுகளில் தெளிவாயிற்று. இன்று சிபிஐ,சிபிஎம் தலைவர்கள் "சில தவறுகள் நேர்ந்துவிட்டன" என ஒப்புக்கொண்டுள்ளார்கள். இந்த ஒப்புதல் எவ்வளவோ பேசுகிறது. நிற்க. நான்'சுயவிமர்சனம்' செய்து கொண்டாலும் பிரிட்டிசார் என்னை விடுவிக்கவில்லை. எனது

படிப்பகம்

www.padippakam.com



எனது சுயவிமர்சனம் மிகவும் மேலோட்டமானது என்பது அவர்களின் உளவுக் கண்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். நான் தொடர்ந்து சிறை வைக்கப்பட்ட ஒரு காரணம், நான் 'மக்கள்போர்ப்' பாதையை எதிர்த்தது ஆகும் என சிறையில் என்னிடம் தரப்பட்ட அதிகாரபூர்வக் குற்றப் பத்திரிகை எழுத்து மூலம் கூறியது! எங்களை விடுவிக்குமபடி கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் அநேகதடவை கோரியது என்னவோ உண்மை. ஆனால் ஒன்றும் காரியமாகவில்லை. 1945 அக்டோபர் வரை என்னைப் பிரிட்டிசார் விடுவிக்கவில்லை.

கேள்வி:- அப்படியானால் 1942 ஆகஸ்டில் காங்கிரஸ் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தைத் தொடுத்தபோது நீங்கள் சிறையில் இருந்திக்கிறீர்கள். அந்த இயக்கத்தை ஒட்டி சிறைகளில் நிரம்பிய காங்கிரஸ் தொண்டர்களும் தலைவர்களும் சிபிஐ மீது மிகுந்த கசப்பைக் காட்டினார்களா?

பதில்:- 'மக்கள் போர்ப்' பாதையின் அநுதாபிகள் ஒரு நிடிலப்பாட்டை வளர்த்தெடுத்தார்கள். 'நீரோட்டத்துக்கு எதிராக நீச்சல் போட்டதன்' விளைவாக சிபிஐக்கு ஏராளமான ஆதரவு சேர்ந்துள்ளது என்பது அந்நிலைப்பாடு. நான் இதனை ஏற்க மாட்டேன். சட்டரீதியாக செயல்படப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வழங்கிய உரிமையை க் கட்சி தனக்கு அநுகூலமாக்கிக் கொண்டு புதுஉறுப்பினர் சேர்க்கவும் தொழிற்சங்க பலத்தைப் பெருக்கவும் முடிந்தது தான். ஆனால் அதன் நீச்சல், மக்கள் இயக்கம் என்ற நீரோட்டத்துக்கு எதிராக இருந்து விட்டது என்பதும் , பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கூட்டாளியாய் அது கருதப்பட்டது என்பதுமே விசயம். இச்சந்தர்ப்பத்தில் கம்யூனிஸ்டுகளாக இருப்பது கவுரவத்துக்குரியதாக ஆயிற்று. பல கம்யூனிஸ்டு இளைஞர்கள் 'சோவியத் நாட்டைக் காப்பதற்காக' பிரிட்டிஷ் சேனையில் சேர்ந்து இத்தாலிக்கும், வடஆபிரிக்காவுக்கும் சென்றனர். அவர்களில் சிலர் தமது 'கம்யூனிசச்' சட்டையை விரைவில் உரிந்து எறிந்து விட்டு போருக்குப் பின்னும் சேனையிலேயே நிரந்தரமாகிவிட்டனர். 1942 ஜூலையில் சுமார் 4500 பேராயிருந்த கட்சி உறுப்பினர் தொகை 1943மேயில் முதல் கட்சிக் காங்கிரசின் போது-15,500க்கும் அதிகமாயிற்று. மக்கள் அமைப்புகளின் உறுப்பினர் தொகையும் அதிகமாயிற்றுஉண்மை கூடியது உண்மை ஆனால் இந்தப் புது உறுப்பினர்களில் பெரும்பாலார் எந்தப் புரட்சிகரமான மக்களியக்கத்திலோ போலீஸ் ஒடுக்கு முறையிலோ பட்டுத் தேறாதவர்கள். மாறாக கட்சி நடத்திய 'உணவுப்பயிர் விளைச்சலைப் பெருக்குவோம்! உற்பத்தியை அதிகரிப்போம், தேசியத் தலைவர்களை விடுதலைசெய் தேசிய அரசாங்கத்தை அமை, ஒருநாளும் வாராத ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து தாய் நாட்டை விடுவிப்வோம் போன்ற அமைதியான இயக்கங்களையே கண்டவர்கள். வேலை நிறுத்தம் செய்வதை இந்தக் கட்டத்தில் நாசவேலை என்றனர்- கம்யூனிஸ்டுகள். 1943 வங்காளப் பஞ்சத்தில் சிக்கினவர்களைக் காப்பாற்றும் சமூகநல நடவடிக்கைகளில் கடசி உறுப்பினர்கள் ஈடுபட்டனர். பெரியம்மை, வாந்திபேதி போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கு மருத்துவ உதவிக்கு ஏற்பாடு செய்தனர். உயிரிழப்புக்கு பயங்கரமாக அஞ்சும் இந்தியாவில் மேற்படி சமூகப்பணிக்கு உரிய ஆதாயம் கிடைத்தது தான். ஆனால் மக்கள் சந்திக்கிற எல்லாப் பிரச்சனைகளின் மூல காரணங்களையும் கண்டு வெளிப்படுத்துவதல்லவா நம் அடிப்படைப் பணியாயிருக்க வேண்டும்? அதைத்தான் நாம் செய்யத் தவறினோம்.

படிப்பகம்

www.padippakam.com



மறுபுறம் 1942-'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்துக்கு பிறகு காங்கிரஸ் கண்ட வளர்ச்சியும் செல்வாக்கும் எடுப்பானதாயிருந்தது. லட்சக்கணக்கான ஆண்களும் பெண்களும்- குறிப்பாக இளைஞர்கள்-போராட்டத்தால் கவரப்பட்டு தீவிரமானவரானார்கள். இப்போராட்டம் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான புரட்சியாகக் கருதப்பட்டது. கைதானதலைவர்களை விடுவிக்கக் கோரியும், 'மக்கள் போரை' நடத்துவதற்காக ஒரு தற்காலித் தேசிய அரசாங்கம் அமைப்பதற்காகவும் நாங்கள் இயக்கம் நடத்தினோம் என்பது உண்மைதான். ஆனால் அதேபோது காங்கிரஸ்-சோசலிஸ்டுக்களையும் போசின் ஆதரவாளர்களையும், கைதுகளுக்கும் போலீஸ் அராஜகத்துக்கும் அஞ்சாமல் போராட முன் வந்த பிற தீவிரவாதிகளையும் ஐந்தாம் படையினர் என்றும் நாசக்காரர்கள் என்றும் முத்திரை குத்தினதும்-நாம்தான். இந்த மனிதர்களின் வன்முறைகளைக் கண்டிக்குமாறு காந்தியிடமும் பிற காங்கிரஸ் தலைவர்களிடமும் கோரி நின்றோம்ம தாம் விடுதலையானபின் நேருவும் பிற அகிம்சாவாதிகளும் மேற்படி மனிதர்களைக் கண்டிப்பதற்குப் பதில் உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்புத் தேசபக்தர்கள் என அவர்களைப் பாராட்டினர். சுபாஷ் போஸ் ஜெயப்பிரகாஷ் நாராயன், அருணாஆசாப்அலி போன்றோர் மட்டுமல்ல. அநாமதேயங்களாயிருந்த கர்னல் லெட்சுமி போன்றோர்கூட தேசிய வீரர்களாயும் வீராங்கனைகளாயும் போற்றப்பட்டனர்.

ஒரு தசாப்தத்தில் இரண்டாவது தடவையாக தேசியப் போராட்டமென்னும் பிரதான இயக்கத்திலிருந்து சிபிஐ தனிமைப்பட்டு விட்டது என்பதே யதார்த்தம். கட்சியின் கொள்கையானது ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை முழுமையாகத் தாம்பாளத்தில் வைத்த காங்கிரசுக்கும் இந்திய முதலாளி வர்க்கத்திற்கும் தாரை வார்த்து விட்டது என்பதே எனது கருத்தாகும்.' அந்த சமயத்திலும்கூட சிபிஐ ஒரு சரியான நிலைப்பாட்டை எடுத்துக் கடைப்பிடித்திருந்தால், காங்கிரசின் கணிசமானதும், தாக்கமானதுமான பகுதியினரை கம்யூனிசத்துக்கு வென்றெடுத்திருக்கக்கூடிய சாத்தியப்பாடு நிலவியது. 1936-42 கட்டத்தில் நேருவே தன்னளவில் மிகத் தீவிரமான நிலை எடுத்தார், காங்கிரசுக்குள் அநேக இடதுசாரிப் போக்குகள் (காங்கிரஸ-சோசலிஸ்டுகள், சுபாஷ் போசின் ஆதரவாளர்கள் போன்றோர்) நிலவின. சிறையிலிருந்து விடுதலையானதும், எமது கூட்டங்களில் 'பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆதரவாளர்கள் ஒழிக' என முழங்கும் வழக்கமுடைய இடது தேசியவாதிகளின் சீற்றத்தைக் கண்டேன். ஆக நீரோட்டம் சரியான திசை யில் இருந்த போது அதை எதிர்த்து நீச்சலிட்டவர்கள், உண்மையான சுதந்திரத்துக்கும் சோசலிச மாற்றத்துக்கும் இருந்த வாய்ப்பை மூழ்கடித்து விட்டார்கள். இந்திய முதலாளி வர்க்கம் தன் சூழ்ச்சித் திறத்தால் நம்மைவிஞ்சி தாண்டியும் சென்றுவிட்டது.

இந்நிலையில் எங்களுக்கென கொஞ்ச ஆதரவையேனும் தக்க வைத்துக் கொள்ள முடிந்ததென்றால் அதற்குக் காரணம் 1946-7 கட்டத்தில் இரண்டாம் உலகப் போர் முடிந்த உடனேயே தீவிரமான வேலைநிறுத்தப் போராட்டம் வளர்ச்சி பெற்றதும் அதில் நாங்கள் ஈடுபட்டதும்தான். எங்கள் அரசியலோ இப்பவும் பிழையானதாகவே இருந்தது. உதாரணமாக பாகிஸ்தான் தனிநாடாவதை நாங்கள் ஆதரித்தோம். பம்பாயில் 1946-ல் கப்பற்படையினர் துவங்கிய கிளர்ச்சிக்கு ஆதரவு திரட்டியது சிபிஐதான். ஆனால் அதன் அரசியல்பாயத

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் அதன் அரசியல்பாதை காங்கிரஸ்—முஸ்லீம்லீக் ஒற்றுமையை ஆதரிப்பதாக இருந்தமை கப்பற்படையினருடனான உண்மையான ஐக்கியத்துக்கு ஊறுவிளைவிப்பதாயிற்று. கப்பற்படைக் கிளர்ச்சி முறியடிக்கப்பட்டதற்கு பிரிட்டிசாரைவிட அதிகமாய்க் காரணம் காங்கிரஸ்லீக் தலைவர்கள்தான். இடப்பக்கமிருந்து வந்த புது அச்சுறுத்தலை எதிர்கொள்ள இருவரும் தற்காலிகமாக இணைந்துக் கொண்டார்கள். ரஷ்யப்புரட்சியில் நடைபெற்ற சில சம்பவங்களை ஒத்திருந்த இது அவர்களுக்கு அசௌகரியமானதாயிருந்தது. நான் உட்பட எங்களில் பலர், வர்க்கப் போராட்டங்களைத் தூண்டி விட்டதற்காக மீண்டும் கைது செய்யப்பட்டோம். சுதந்திரத்துக்கு 24 மணி நேரத்துக்கு முன்பாகத்தான் அதாவது 1947 ஆகஸ்ட் ~~15~~ 13 அன்றுதான்—நாங்கள் விடுவிக்கப்பட்டோம்.

கேள்வி:— சுதந்திரத்துக்குப் பின்பு சிபிஐ அதி இடதுப் பாதையில் செல்லக் காரணமாயிருந்த அபகீர்த்தி வாய்ந்த ரணதிவே ஆய்வுரைகளின் (4) பின்னணி என்ன?

பதில்:— ஒன்றுக்கொன்று தொடர்புள்ள காரணிகள் பலவற்றையும் நாம் கவனமாக வேறுபடுத்திக் கொள்ள வேண்டும். ரணதிவேயால் வரையப்பெற்றதும் 1948—ல் கல்கத்தாவில் நடந்த 2—ம் கட்சிக் காங்கிரசால் ஏற்கப்பட்டதுமான ஆய்வுரைகள் அதிஇடத்து தன்மையானதே என்பதில் சந்தேகமில்லை. ஆனால் 50களின் பிற்பகுதியிலோ அல்லது இன்றோ கூட அவற்றைப் பற்றி பல கம்யூனிஸ்டுகளும் இடதுசாரி காங்கிரஸ்காரர்களும் செய்கின்ற விமர்சனங்கள், அவை சீர்திருத்தவாத வட்டத்துக்குள்ளிலிருந்து செய்யப்படுவதால், பொருளற்றதும் போலியானவையுமாயுள்ளன.

ஆட்சியதிகாரம் கைமாறியதும் நாட்டின் பல பகுதிகளில் எதிர்பார்க்கப்பட்ட பே ராட்டங்கள் வெடித்தன. இப்போராட்டங்களுக்கு ஒரு இரட்டைத் தன்மை இருந்தது. அவை காங்கிரசுக்கு ஆட்சியதிகாரம் மாற்றப்பட்டதைக் கொண்டாடின. அதே சமயம் காங்கிரஸ் தன் முற்போக்கான வாக்குறிகளை அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் என்றும் எதிர்பார்த்தன. (1937—ல் பிரிட்டிசார் இந்தியாவில் இருந்த வேளையிலும் மாகாண அரசாங்கங்களுக்குக் காங்கிரஸ் தேர்ந்தெடுக்கப்படுகையிலும் போராட்டங்கள் வெடித்தன. ) இப்போராட்டங்கள் நமக்குத் தெரிவிப்பது என்னவென்றால், முதலாளிய அரசியலரங்குகள் பெறப்படும் முக்கியமான வெற்றிகளுக்கும் பாராளுமன்ற அரசியலுக்கும் வெளியிலான மக்களியக்கத்துக்கும் ஒரு தொடர்பு உண்டு என்பதைத்தான். தெலிங்கானாவிலும் (ஐதராபாத்) போராட்டம் நடந்தது. இது சுதந்திரத்துக்கு முன்பே துவங்கி யிருந்தது. ஐதராபாத் நிசாமுக்கும் அவனது நிர்வாகத்துக்கும் ஐதராபாத்தைச் சுற்றியுள்ள கிராமப் பகுதியிலிருந்த அவன் ஆதரவுபெற்ற நிலக் கிழாக்கர்களுக்கும் எதிராக அப்போராட்டம் தொடுக்கப்பட்டிருந்தது. இங்கும் இந்தியச் சேனையின் தலையீடு, நிலைமையை மாற்றிவிட்டது. நிசாமை அகற்றிவிட்ட அதேபோது இடதுகளின் வளர்ச்சியையும் அது தடுத்துவிட்டது.

www.padippakam.com



சுதந்திரத்துக்குப் பிந்திய எழுச்சியில், தொழிலாளிகள், விவசாயிகள், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். தொழிற்சங்க உரிமைகள் மற்றும் பிற உரிமைகளைக் கூடுதலாய் பெறவும் நிலக்கிழமையை ஒழிப்பதற்காகவும் பல இடதுசாரி காங்கிரஸ் ஆதரவாளர்களும் இப் போராட்டங்களில் கலந்து கொண்டனர். காங்கிரசைக் கூடக் கொஞ்சம் இடதுபுறம் தள்ளிவிடும் நோக்கமே அவர்களுடையது. முந்தின ஆண்டுகளில் இந்திய நிலைமைகளைப் பற்றிய ஆய்வின் அடிப்படையில் ஒரு சரியான போர்த் தந்திரத்தை உருவாக்கியிருந்தால், இந்தப் போராட்டங்களில் சிபிஐ தலைமைப் பாத்திரம் வகித்திருக்க முடியும். அப்படி நேர்ந்திருந்ததால் ரணதிவே ஆய்வுரைகள் அந்த நேரத்தில் பொருத்தமற்றதாகப் போயிருக்கும் அதே வேளையில், பெரிய அளவில் எதிரொலிகளையும் தோற்றுவித்திருக்கும். எப்படியும் 1948 கட்சிக் காங்கிரசின் அதி இடதுவாதம் பேரழிவு பயப்பதாகவே ஆயிற்று. நேருவின் அரசாங்கத்தைத் தூக்கியெறிய மக்கள் தயாராயிருக்கவில்லை. மாறாக மக்களிற் பெரும்பாலோர் அதைத் தங்களது அரசாங்கமாகவே கண்டனர். இந்நிலையில் சிபிஐ முன் வைத்த 'பெற்ற சுதந்திரம் போலிச் சுதந்திரம்' என்ற முழக்கம் கட்சியைத் தொடர்ந்து தனிமைப்படுத்துவதற்கே உதவியது. இந்த முழக்கத்துடன் சேர்த்துத் தொடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டம், துணைக் கண்டம் முழுவதிலும் பல ஊழியர்களின் சாவுக்கும் கைதுகளுக்கும் சித்திரவதைக்குமே வழிகோலியது. நேருவின் அரசாங்கம் ஏகாதிபத்தியத்தின் தரகு அடிமை அரசாங்கமாகும் என்ற ஆய்வுமுடிவு மற்றொரு தவறாகும். ஏனெனில் அதன் பொருள், காலனிய பிரிட்டிஷ் ஆட்சிக்கும் காலனியத்துக்குப் பிந்திய நேருவின் அரசாங்கத்துக்கும் வேறுபாடில்லை என்றாகும். இந்திய ஆளும் வர்க்கம் உண்மையில் ஒருபோதும் தரகுவர்க்கமாய் இருந்ததில்லை. என்பதை இன்று மார்க்சியர்கள் பொதுவாக ஒப்புக் கொள்கிறார்கள். காலனிய ஆட்சிக் காலத்திலேயே ஒப்பளவில் சுயேட்சை பெற்றிருந்த அவ்வர்க்கம், சுதந்திரத்திற்குப் பின்பு போய் தரகுவர்க்கமாகிவிட்டதுஎன்பது ஒரு தவறான போர்த் தந்திரப் பாதையைத் தாங்கிப் பிடிப்பதாகும். அவ்வகையில் அது அதி இடதுவாதமாகும். அது மட்டுமல்ல இந்தியக் கம்யூனிசத்தின் கோட்பாட்டு வறுமையையும் அது வெளிப்படுத்துகிறது. அக்கால கட்டத்தில் கட்சி வைத்திருந்த பல தவறான கருத்தோட்டங்களையும், 60 களின் பிற்பகுதியில் மீண்டும் நக்சல்பாரியிலும் இந்தியாவின் பிறபகுதிகளிலுமிருந்த மாவோயிசப் புரட்சிக்காரர்கள் எடுத்துக் கொண்டார்கள். இதன் விளைவுகள் எவ்வளவு பேரழிவு பயத்தன என்பதை நாமறிவோம். நூற்றுக் கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் சித்திரவதை செய்யப்பட்டனர் என்பதுடன் இயக்கம் தொடர்ந்த பின்னடைவுகளைச் சந்தித்தது. ஆயிரக்கணக்கான அரசியல் கைதிகளை இந்திய ஆளும் வர்க்கம் சிறை வைத்திருக்கும் வடிவில் இன்னும் அதன் நிழல் தொடர்கிறது இதிலுள்ள பரிதாப நிலை என்ன வென்றால் இந்தக் கைதிகளுக்கு எவ்வித பொதுமக்கள் ஆதரவும் இல்லாதிருப்பதுதான்.

1948-க்குத் திரும்புவோம். நான் உட்பட ஏராளமான கம்யூனிஸ்டுகள் மீண்டும் கைதானோம். சிறையில் ரணதிவே ஆய்வுரைகள் பற்றி பல விவாதங்கள் துவங்கின. புதிய பாதை பற்றி மிகுந்த அதிருப்தி காணப்பட்டது தொழிற்சங்கத் தோழர்கள் மேன்மேலும் கட்சித் தலைமையிடம் முரண்பட்டு வந்தார்கள். கட்சித் தலைமை ரயில் வேலை நிறுத்தத்துக்கு அறைகூவல் விடுத்தது. வேலை நிறுத்தம் படுதோல்வியடைந்தது. ரயில் தொழிலாளர்க சங்கத்தில் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் யார் யார் என்பதைத்

படிப்பகம்

www.padippakam.com



காட்டிக் கொடுப்பதில்தான் அது வெற்றி பெற்றது. பலர் கைதாகினர். தொழிற்சங்கத் தலைவர்கள் புரட்டல்வாதிகள், சீர்திருத்தவாதிகள்; எனவே தான் ரயில் வேலை நிறுத்தம் வெற்றி பெறவில்லை என கட்சித் தலைவர்கள் கூறினர். ஆனால் இந்த விவாதமும் விரைவில் ஒரு குறிப்பிட்ட பாணிக்கு மாறியது. இந்தியாவின் யதார்த்த நிலைமைகள் பற்றி ஆய்வு முயற்சி எதுவும் செய்யப்படவில்லை. மாறாக பின் கண்டபாணியில் விவாதம் நடந்தது. 'ஸ்டாலின் என்ன சொல்கிறார் என்றால்..., அதற்கு எதிர் கரப்பினரின்; "ஆனால் மாவோ சொல்வது என்ன என்றால்..." ஆக விவாதம் பெரிதும் பலனற்றதாகிப் போனது. அவ்வாறே இந்த விவாதங்களில் பெறப்பட்ட முடிவைக் கட்சி முழுவதும் விவாதிக்க அனுமதிப்பதோ அதன் பயனாய்க் கிடைக்கும் ஆலோசனைகளைக் கொண்டு கட்சி காங்கிரஸ் ஒரு முடிவு எடுப்பதோ நடைபெறவில்லை. மாறாக தன் ஸ்டாலினிய மரபு கெடாமல் கட்சித் தலைமை மாஸ்கோவுக்கு ஒரு தூதுக் குழுவை அனுப்பிவைக்கத் தீர்மானித்தது-ஸ்டாலினைச் சந்திக்க இந்த பிரத்தியேக இந்த பிரத்தியேக தகுதிக்கு உரியவராய் நான்கு தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அஜாய்கோஷ், ராஜேஸ்வரராவ், எஸ்.ஏ.டாங்கே, பசவ புன்னையா ஆகியோர் அவர்கள். ரணதிவே பின்னுக்குத் தள்ளப்பட்டார். போனவர்கள் ஒருபுது நடைமுறைத் தந்திரத்துடனும் நகல் திட்டத்துடனும் திரும்பினர். 1951 அக்டோபரில் கல்கத்தாவில் கூடிய கட்சியின் சிறப்பு மாநாடு அவற்றை ஏற்றுக் கொண்டது.

ஸ்டாலின், மாலடவ், கஸ்லோவ் ஆகியோரின் நேரடி வழி காட்டுதலின் கீழ் வடிவமைக்கப்பட்ட புதிய பாதையாவது:- காங்கிரஸ் அரசாங்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியரின் சம்மதத்துடன் நறுவப்பட்டதாகும். இந்தியாவில் இன்னும் காலனிய அமைப்பு நிலவுகிறது. ஏகாதிபத்தியவாதிகள் தம் ஆட்சியை இப்போது காங்கிரஸ் அரசாங்கமென்ற போர்வைக்குள் மறைத்துள்ளார்கள். காங்கிரஸ் அரசாங்கம் ஏகாதிபத்தியத்துக்கு முழுக்கவும் அடிமைப்பட்டதாகும் எனவே கம்யூனிஸ்ட் கட்சியின் உடனடிக்கடமை, இந்திய அரசைத் தூக்கி எறிவதும் அதனிடத்தில் ஒரு மக்கள் ஜனநாயக அரசை நிறுவதும்தான். ஆக அதிகாரம் கைமாறப்பட்டு நான்காண்டுகள் கழிந்தபின் ஸ்டாலினும் சோவியத் நாட்டின் பிற தலைவர்களும் இந்தியாவை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குக் கீழ்ப்பட்ட ஒரு காலனிய நாடு என கருதினர். புதியபாதையைக் கட்சி மாநாடு ஏற்றுக் கொண்டதில் வியப்பில்லை. அதிலும் 'மாபெரும் மார்க்சிய லெனினியவாதி'யும் உலகப் புரட்சியின் தலைவருமாகியவரே அப்பாதைக்கு ஆசி வழங்கியிருக்கிறாரே! குறைந்தது 1956 வரை நம் தோழர்கள் பெரும்பாலோரின் சிந்தனைப் போக்கு இப்படித்தானிருந்தது. நானுமே கொஞ்சக் காலம் இந்த அபத்தப் பார்வையையே கொண்டிருந்தேன். ஆனால் விரைவில் சந்தேகங்கள் எழுந்தன. இந்தியா அரசியல் ரீதியில் சுதந்திரமானது என வாதிடத் துவங்கினேன்.

இருப்பினும் நடைமுறையில் ஒரு புதிய வளர்ச்சி ஏற்பட்டது. 1951ல், புதிய திட்டத்தைத் தழுவின கையோடு சமீபித்து வந்த பொதுத் தேர்தலிலும் கலந்து கொள்வதெனக் கட்சி முடிவெடுத்தது. இம்முடிவு தன்னளவில் சரியேயாயினும் தேர்தலுக்குப் பின் கட்சி மேற்கொண்ட கொள்கைகள் கட்சிக்கு நேர்ந்திருந்த மாற்றத்தை மிகத் தெளிவாகக் குறித்துக்காட்டின. அதி இடதுவாதத்திலிருந்து கட்சி பாராளுமன்றக் குறுக்கல் வாதத்துக்குப் பயணப்பட்டிருந்தது. தேர்தல் அறிக்கையும் 1951ன் புதிய திட்டமும், இந்தியா இன்னும் பிற்பட்ட காலனிய நாடாயிருப்பதால் 'சோசலிசம் கட்சியின் உடனடி இலட்சியமல்ல' என்று அறிவித்தன. "ஜனநாயக விரோத, மக்கள் விரோத

படிப்பகம்

www.padippakam.com



"ஜனநாயக விரோத, மக்கள் விரோத நேருவின் அரசாங்கத்தை தூக்கியெறிந்து மக்கள் ஜனநாயக அரசாங்கத்தை அமைப்பதே உடனடிக் கடமை. இதற்காக அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலக்கிழமை எதிர்ப்புக் கட்சிகளுடனும் சக்திகளுடனும் கூட்டணி அமைப்பது வேண்டும்." வர்க்கம் என்பதற்குப் பதில் கட்சி என்ற சொல்லும் அரசு என்பதற்குப் பதில் அரசாங்கம் என்ற சொல்லும் ஆளப்பட்டுள்ளது காண்க. இது சொல் மாற்றம் மட்டுமல்ல 1948-51 லிருந்து கட்சி தன் லட்சியம் மக்கள் ஜனநாயக அரசை நிறுவுவதே என்றும், இவ்வரசே பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தின் அடிப்படையாயிருக்கும் என்றும் கூறிவந்தது. மக்கள் ஜனநாயகம் என்ற புதிய புதிய வாய்ப்பாட்டிலும், அதிலுள்ள தெளிவற்ற பகுதிகள் மழுப்பல்கள் ஆகியவற்றைத் தூர வீசிவிட்டுப் பார்த்தால் 'இலட்சியம்' தெளிவாகிறது. மதுரையில் கூடிய மூன்றாம் கட்சிக் காங்கிரஸ், "கட்சியின் மையக்கடமை, காங்கிரஸ் அரசாங்கத்தை இறக்கி ஜனநாயக ஒற்றுமை கொண்ட 'மக்கள் அரசாங்கத்தை' அமைப்பதற்காக போராடுவதே ஆகும்" என்பதை வலியுறுத்தியது. இங்கு 'மக்கள் ஜனநாயகம்' எனப்படுவது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் அல்ல என்பது வெளிப்படை. 'மக்கள் ஜனநாயகம்' என்பது சிபிஐயும் காங்கிரஸ் எதிர்ப்பு ஜனநாயகக் கட்சிகளும் கொள்ளும் கூட்டணியிலிருந்து பிறப்பது. பாராளுமன்றப் பெரும்பான்மையை எய்துவதும் அரசாங்கங்களை அமைப்பதற்குப் போதிய கூட்டாளிகளைப் பொறுக்குவதும்தான் கட்சியின் லட்சியம். வெவ்வேறு வடிவில் இதுவே சிபிஐ, சிபிஎம் இரண்டின் கொள்கையாகவும் இருந்து வருகின்றது.

கேள்வி:- சிபிஐ குறுங்குழுவாதத் தவறுகள் கொண்டதாயிருந்தும் கூட 1951 பொதுத் தேர்தலில் அக்கட்சி வெற்றி பெற்றது எப்படி என்பதை விளக்குவீர்களா? அடக்கு முறையை அனுபவித்திருந்த கட்சி அது. ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளிடமிருந்து தனிமைப்பட்டிருந்தது. தேர்தலில் கலந்து கொள்ள வேண்டும் என முடிவு செய்ததும் கடைசி நேரத்தில்தான். ஆயினும் அம்முடிவு சரியானதானது எப்படி?

பதில்:- தேர்தல் முடிவுகளைப் பார்த்து நாங்கள் எல்லோரும் வியப்படைந்திருந்தோம். பாராளுமன்றத்தில் சுமார் 26,27 இடங்களைப் பிடித்தோம். காங்கிரசுக்கு அடுத்த மிகப் பெரும் கட்சியாகவும் எதிர்ப்பு அரசாங்கத்துக்கு மிகப்பெரும் எதிர்ப்பு மையமாகவும் ஆனோம். சில இடங்களில் எங்கள் வேட்பாளர்கள் நேருவை விட அதிக வாக்குகள் பெற்றனர். சம்பத்தில்தான் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த அல்லது சிறையிலிருந்த அனேக தோழர்கள் ஒரே நாளில் பாராளுமன்றம் அல்லது தற்காலிக சட்டமன்றங்களின் உறுப்பினர்கள் ஆனார்கள். இவ்வெற்றிக்கு முதன்மையான காரணம் என்ன? நமக்கு வாக்களித்த மக்கள் நமது குறுங்குழுவாதப் பாதை சரியானதென நினைத்தார்கள் என்பது அல்ல. கட்சி ஊழியர்கள் மக்களியக்கத்தில் ஊறியிருந்தார்கள் என்பதே முதன்மையான காரணங்களாகும். அவ்வூழியர்கள் தொழிற்சங்கங்களிலும் உழவர் சங்கங்களிலும் பணியாற்றினார்கள். அவர்களில் பலர் தம் நேர்மைக்காகவும் துணிச்சலுக்காகவும் மெச்சப்பட்டார்கள். ஆகவே 1951 தேர்தலில் சிபிஐ.க்குக் கிடைத்த வாக்குகள் நேரடியான வர்க்க வாக்குகளாகும், அன்றைய சூழலில் நிலவிய உள்ளுறை ஆற்றல்கள் அது குறித்தது. இவ்வாற்றல்கள் வெளிக்கொணரப்படவில்லை என்பதற்கு ஒரு உதாரணம் மட்டும் சொல்கிறேன்-பாராளுமன்றத்தில் கட்சியின் பிரதி

படிப்பகம்

www.padippakam.com



14

பாராளுமன்றத்தில் கட்சியின் பிரதிநிதித்துவம் 1951-ல் இருந்த அளவிலே தான் ஏறக்குறைய இன்றும் உள்ளது. எப்படி?

கேள்வி:- பாராளுமன்ற வாதத்தை நோக்கிய திருப்பம் ஏற்பட்ட பின், பாராளுமன்றத்துக்குப் புறம்பாக எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்வது என்பது பற்றி கட்சிக்குள் விவாதம் ஏதும் நடந்ததா? மக்கள் போராட்டங்களிலிருந்து கட்சி உறுப்பினர்கள் முற்றாக விலகிக் கொள்வது அறவே இயலாத காரியமல்லவா?

பதில்:- ஆம். கட்சிக் குழுக்களில் விவாதங்கள் நடந்தன. கொரியப் போருக்குப் பின் சோவியத்நாடு முதலாளிய அரசுகளுடன் சமாதானமும் ஒத்துழைப்பும் என்ற கொள்கையை மீண்டும் கடைப்பிடிக்கத் துவங்கியது. இதைப் பின்னர் குருச்சேவ் 'சமாதான சகவாழ்வு' எனக் கோட்பாடாக்கினார். சோவியத்நாடும் சீன மக்கள் குடியரசும் இந்திய அரசாங்கத்தை அதன் 'முற்போக்குக்' கொள்கைகளுக்காகவும் குறிப்பாக அணிசேரா அடிப்படையிலான அதன் வெளிநாட்டுக் கொள்கைகளுக்காகவும் புகழத் துவங்கின. குருச்சேவும் சூ என் லாயும் இந்தியாவுக்கு வந்தபோது அவர்களுக்குப் பெருங்கூட்டம் வந்தது. 'பாண்டுங் உணர்வின்'(5) சிற்பிகளில் ஒருவரானவர் நேரு. இந்தப் பின்னணியில்தான் எங்கள் கட்சிக்குள் விவாதம் தொடர்ந்தது. இந்தியா உண்மையாகவே சுதந்திரநாடா? அல்லது பிரி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடிமை நாடா? அரசியலரங்கில் யாருடன் நாங்கள் நட்புக் கொள்வது? சிபிஐ.யின் மலபார் மாகாணக் குழுவில் நாங்கள் விவாதங்கள் நடத்தியது எனது நினைவில் இருக்கிறது. அக்குழுவில் நான்கு செயலாளராயிருந்தேன். கட்சிக் காங்கிரஸ் கூடுவதற்கு முன் மலபாரில் கூட்டப்பட்ட மாநாட்டில் நடந்த விவாதத்திலும் நான் பங்கேற்றேன். சிலர் காங்கிரஸ்-கம்யூனிஸ்ட் கூட்டணி அரசாங்கத்தை விரும்பினர். பிறர் காங்கிரஸ் எதிர்ப்பு முன்னணிக்குச்சார்பாக வாதிட்டனர். காங்கிரஸ் தலைமையின் கீழிருந்த இந்தியத் தேசியத் தொழிற்சங்கக் காங்கிரசை (ஐஎன்டியுசி) அவர்கள் கடுமையாகத் தாக்கினர். இருசாராருமே பிரச்சனையை தேர்தலில் வெற்றி பெறும் பிரச்சனையாகப் பார்த்தனர். ஒடுக்கு முறையாளர்களுக்கெதிராக போராடுவதற்காக மக்களை வர்க்க ரீதியில் ஒன்றுதிரட்ட முயல்வதுவே தேர்தல் ரீதியாகக் காங்கிரசைப் பலவீனப்படுத்துவதுமாகும் என்பதை இத்தோழர்கள் உணரவில்லை. எனவே இருபாதையினரிடமிருந்தும் நான் மாறுபட்டேன்

அப்போதைய எனது நிலைப்பாடு என்னவென்றால், முதல்வேலையாக சிபிஐ இனிவரும் போராட்டங்களுக்கு ஒரு மக்கள் பாதையை முன்வைக்க வேண்டும் என்பதாகும். இந்தப் போராட்டத்தை கட்சிகளுக்கிடையிலானதாக அன்றி வர்க்கங்களுக்கிடையிலானதாகவே கருதவேண்டும். ஆயின் ஏஐடியுசி, ஐஎன்டியுசி மற்றும் பிற தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளை முதலாளிகளுக்கெதிராக ஒன்றுபடுத்த நாம் முனைதல் வேண்டும். இதன்மூலம் போருக்கு பிந்திய உடனடிக் கால கட்டத்தில் (கட்சிகளாக) பிளவுபட்டிருந்த தொழிலாளிவர்க்கத்தையும் பிற மக்கள் அமைப்புகளையும் நாம் ஒன்றுபடுத்த முடியும். வர்க்க ஒற்றுமை என்பதன் அடிப்படையில் மக்களின் முற்போக்குப் பிரிவினர் அனைவரையும் ஒன்றுபடுத்த நாம் பாடுபட வேண்டும் (இவர்களில் காங்கிரஸ் ஆதரவாளர்களும் இருக்கலாம்) இதன் மூலமே நிலச்சீர்திருத்தம், தொழிலாளர் உரிமைகள், உறுதியான ஏகாதிபத்திய எதிர்ப்பு வெளிநாட்டுக் கொள்கை போன்றவற்றை செயல்படுத்த முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



இந்தப் போராட்டங்கள் மூலமே மக்களை முதலாளியத் தாக்கத்திலிருந்து விடுவித்து தொழிலாளிவர்க்க மேலாண்மையை உருவாக்க முடியும் என்பது எமது வாதம். இந்த அடிப்படையில்தான் நான் கொண்டுவந்த அரசியல் தீர்மானம் மலபார் கட்சி மாநாட்டில் பெரும்பான்மை ஆதரவுடன் ஏற்கப்பட்டது.

கட்சியின் நாலாம் காங்கிரஸ் 1956ல் பாலக்காட்டில் நடத்தப்பட்டது. பெரும்பான்மை உறுப்பினர்கள் காங்கிரஸ் எதிர்ப்பு முன்னணியையே வலியுறுத்தினர். இந்திய முதலாளி வர்க்கம் பிரிட்டிஷ் நிதி மூலதனத்திற்குக் கீழ்ப்பட்டுள்ளது என்ற அவர்களின் கொள்கைக்கு இது இசைவானதே. பி.சி.ஜோஷி, பவானி சென், நான் இன்னும் சிலர் ஒரு மாற்றுத் தீர்மானத்தை விநியோகித்தோம். எங்கள் சார்பில் ஜோஷி அதை முன்வைத்தார். "காங்கிரஸ் அரசாங்கம் ஏகாதிபத்தியத்துக்கு கீழ்ப்பட்டதல்ல." அவ்வப்போது அதனுடன் சமரசங்கள் செய்து கொள்கிறது. அவ்வளவே. காங்கிரஸ் அரசாங்கம் இந்திய முதலாளிவர்க்கத்தின் நலன்களுக்கே பிரதானமாய் சேவை செய்கிறது - மக்களுக்கல்ல. நம் மக்களை வாட்டும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் காரணம் நாட்டின் முதலாளியத் தலைமையே. எனவே முதலாளிய ஜனநாயகப் புரட்சியை நிறைவு செய்யும் பாட்டாளி வர்க்கத் தலைமையை நிறுவுவதிலேயே உண்மையான நிவாரணம் உள்ளது" என்று எங்கள் தீர்மானம் கூறியது. ஏஐடியுசி, ஐஎன்டியுசி, எச்எம்எஸ், யுடியுசி பல்வேறு தொழிற்சங்கங்களையும் ஒன்றுபட்ட தொழிற்சங்க மையமாக இணையவருமாறு அது அறைகூவியது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை மக்கள் நலன்களுக்கும் ஏற்றதாக உருவாக்கப் போராடுவதற்கு ஒன்றுபடுமாறு மக்கள் அமைப்புக்களை அது அழைத்தது. வலுவான மக்கள் இயக்கமாக ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணியை நிறுவி ஏகாதிபத்திய நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றின் எச்சங்கள், வலதுசாரி பிற்போக்காளரின் அரசியல் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டங்கள் மூலமாக பாட்டாளிவர்க்க மேலாண்மையை நிறுவ அத்தகைய ஐக்கிய ஜனநாயக முன்னணியே வழி என நாங்கள் கருதினோம். எங்கள் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. காலவாசிப் பிரதிநிதிகள் எங்களை ஆதரித்தனர். நாங்கள் முன்வைத்த சில திருத்தங்கள் அதிகாரபூர்வ தீர்மானத்தில் இணைத்துக் கொள்ளப் பட்டன. பிற்பாடு தீர்மானம் வெவ்வேறு வழிகளில் வியாக்கியானம் செய்யப்பட இடமேற்பட்டதே அத்திருத்தங்களைச் சேர்த்துக் கொண்டதால் கிடைத்த பலன்.

கேள்வி:- சிபிஐ.யின் காங்கிரசின் மீது சிபிஎஸ்யு.வின் 20ஆம் கட்சிக் காங்கிரஸ் செலுத்திய நேரடித்தாக்கம் யாது? இப்பிரச்சனை விவாதத்துக்கு எடுக்கப்பட்டதா?

பதில்:- நிச்சயமாக. சோவியத் நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து ஒரு தீர்மானம் கட்சிக் காங்கிரசில் சமர்ப்பிக்கப்பட்டது. குருச்சேவின் பேச்சின் பொதுப் போக்கை அது ஏற்றுக் கொண்டது. ஆனால் அவர் எழுப்பிய பிரச்சனைகள் பற்றி மேலுமான விவாதம் வேண்டுமெனக் கோரப்பட்டது. ஆனால் கட்சிக் காங்கிரசிலோ பிறகோ இது பற்றி ஒரு உருப்படியான விவாதமும் நடத்தப்படவில்லை. தொடர்ந்த விவாதம் கோரப்பட்டதன் காரணம், ஸ்டாலின் மீதான தாக்குதல் சரி என்பதை பெரும்பாலான தோழர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நானுமே 1956க்குப் பின் பல பிரச்சனைகள் குறித்துத் தீவிரமாகப் புதிதாய்ச் சிந்திக்கலானேன். ஸ்டாலினைத் தாக்குவதால் குருச்சேவை ஆதரிக்க விரும்பினேன். அதேபோது அந்த நிமிசம்வரை நான் ஒரு வைராக்கியமான ஸ்டாலினிஸ்டாகவே இருந்து வந்தேன்.

படிப்பகம்

www.padippakam.com



20ம் கட்சிக் காங்கிரஸ் நடந்தபின் 2,3 நாட்கள் எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. வழிபாட்டுக்குரியவரென கற்பிக்கப்பட்டிருந்த ஒருவர் எமது உலக இயக்கத்தின் வழிபாட்டு விக்கிரமாயிருந்தவர், அவரது ப ழைய தோழர்களாலேயே தாக்கப்படுகிறார். குருச்சேவின் ரகசிய அறிக்கையைப் படித்த பின்னரும் நான் அதிர்ந்து போன நிலையிலேயே இருந்தேன். கொஞ்சக் காலத்துக்கு அதை என்னால் நம்பமுடியவில்லை. ஆனால் மீண்டும் வாசித்து நிதானித்தபோது குருச்சேவின் கருத்து சரி எ ன்ற முடிவுக்கு வந்தேன். ஸ்டாலினின் ஆதரவாளர்களுக்கெதிராக குருச் சேவை ஆதரித்தேன். ஸ்டாலினைத் தாக்கியதால் மட்டும்தான் குருச்சே வைப் பல தோழர்களும் புரட்டல்வாதி என்றனர். ஏனெனில் மற்றப்படி அவரது ஆய்வுரைகள் ஸடாலினின் நடைமுறைக்கு அதிகம் மாறுபட்டவையாயி ல்லை.

1956 கட்சிக் காங்கிரசில் கட்சியின் உயரங்கமாகிய தேசியக் கவுன்சி லுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அதற்கு முன் நான் முழுக்க மாகாண அளவிலேயே வேலை செய்து வந்திருந்தேன். கேரளாவில் கட்சி கட்டுவ திலேயே முழுக்கவனம் செலுத்தி வந்திருந்தேன்.

கேள்வி:- உங்கள் கட்சியின் நாலாம் காங்கிரஸ் நடந்தபின் சீக்கிரமே கேரளாவி ல் நடந்த மாகாணத் தேர்தலில் சிபிஐ மகத்தான வெற்றிபெற்றது. சட் டசபையில் மிகப் பெரும் கட்சியாக உதயமாகியது. இந்தியாவின் முதன் முதலான கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை ஈஎம்எஸ் நம்பூதிரிபாடு அமைத்தார் மாகாணத்தில் கட்சிக்கு மக்களாதரவு இருந்ததை தேர்தல் முடிவு தெளி வாகக் காட்டியது. அப்போது தூக்கலாய்த் தெரிந்த கெடுபிடிப் போ ர்ச (6) சித்தாந்தத்துக்கு பலத்தஅடி கொடுத்தது. மக்களியக்கத்தி லும் சரி சிபிஐ,யின் வருங்கால வளர்ச்சியிலும் சரி இந்த வெற்றி ஏற்ப டுத்திய நிஜமான பாதிப்புகள் என்ன என்பதாக நீங்கள் கருதுகிறீர்கள்?

பதில்:- கம்யூனிஸ்டு அரசாங்கம் அமைக்கப்பட்டவுடனேயே கேரளக் கட்சிக் கா ங்கிரஸ் தலைமையில் புதிய அரசாங்கத்தின் தன்மை பற்றி சூடான விவா தம் நடந்தது. நம்பூதிரிபாடு உட்பட்ட மத்தியத் தலைவர்கள் கொண்டி ருந்த ஆதிக்கமான நிலைப்பாடாவது-"கேரளாவில் தொழிலாளிகள் தேர்தல்களில் பெரும்பான்மையை வென்றதிலூடன் மூலம் அமைதியான மு றையில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி விட்டார்கள். சமாதான வழி யில் சோசலிசத்துக்கு மாறமுடியும் என்பதற்கு கேரளம் சிறந்த எடுத் துக்காட்டாகத் திகழும். உலகிலேயே இப்படி நடந்தது இதுதான் முத ல் தடவை. எனவே உலகமுழுவதன் தோழர்களுக்கும் வருங்காலத்தில் செயல்பட கேரளா புதுவழிகாட்டியிருக்கிறது" என்பதாகும், ஆரம்பத்தி ல் தலைமையின் பார்வை இதுவே.

இந்தப் பார்வைக்கு நான் உடன்படவில்லை. வெற்றி பெற்றது கம்யூனி-ஸ கம்யூனிஸ்டுகள் என்றாலும், அரசு முதலாளிய அரசாகவே உள்ளது. இத ற்கு மாறான பிரமைகளைப் பரப்புதல் தவறாகும் என நான் வாதாடி னேன். சிறுபான்மைத் தோழர்கள் என்னை ஆதரித்தனர். கட்சிச் செய லாளரான அஜாய்கோஷ் கேரளத் தலைமையுடன் விவாதித்து பிரச் பிரச்சினையைத் தீர்த்து வைக்க டெல்லியிலிருந்து கேரளாவுக்கு அனுப்பப் பட்டார். இரண்டு பார்வைகளும் அவர் முன் வைக்கப்பட்டன. சிறுபான் பான்மைக் கருத்தை நான் முன்வைத்தேன்.

www.padippakam.com



நாம் ஒரு மாகாணத்தில் அரசாங்க அதிகாரத்தைப் பெற்றுள்ளோம். ஆனால் மாகாண அளவிலும் தேசஅளவிலும் அரசானது முதலாளிய அரசாகவே உள்ளது. கட்சியையும் மக்களியக்கத்தையும் வலுப்படுத்துவதற்கு இப்போதைய சூழ்நிலையை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதே நம்மை எதிர்ப்பட்டுள்ள முதன்மையான பிரச்சனையாகும். சுருங்கச் சொன்னால் இப்போது ஆட்சிக்கு வந்துள்ளது தொழிலாளிவர்க்கம் அல்ல என்றேன். பெரும்பாலார் கருத்தை ஈஎம்எஸ் முன்வைத்தார். அவர் முடித்ததும் அஜாய்கோஷ் என்னை நோக்கி விரல் நீட்டி "அப்படியானால் ஈஎம்எஸ் நம்பூதிரிபாடை பூர்சுவா என்கிறீரா? அவர் தொழிலாளி வர்க்கத்தின் பிரதிநிதி அல்ல என்கிறரா?" என்றெல்லாம் கேட்டார். எனது கருத்துஅதுவல்ல என்பது கூறாமலே விளங்கும். அரசு முதலாளிய அரசா இல்லையா என்பதே பிரச்சனை. நம்பூதிரிபாடு ஒரு மாகாண அரசாங்கத்தின் முதலமைச்சர் - அவ்வளவுதான். கோஷ் பெரும்பான்மையை ஆதரித்தார் - முடிந்தது. என் கருத்து என்னோடு இருந்தது. கோஷ் தீர்ப்புக் கூறியபின் எதிர்ப்புக்கு இடமேது? கேரள அரசாங்கம் பதவி இறக்கப்பட்ட பின்தான் நம்பூதிரிபாடு "அரசு தொழிலாளர் அரசாக இருக்கவில்லை" என கம்யூனிஸ்ட் ஏட்டில் கட்டுரை எழுதினார். (அப்போது சிபிஐ,யின் கேரளக் கிளையின் தத்துவார்த்தப் பத்திரிகையாக கம்யூனிஸ்ட் இருந்தது.) இந்த ஞானம் முன்னமே அவருக்கு வந்திருந்தால் நிலைமை முற்றிலும் வேறு மாதிரி ஆகியிருக்கக்கூடும். மக்கள் மக்கள் போராட்டங்களுக்கே முன்னிலை அளித்திருக்க முடியும். கட்சி ஆட்சியதிகாரத்துக்கு வரக் காரணமாயிருந்தது பாராளுமன்றத்துக்குப் புறம்பான மக்கள் போராட்டம்தானே? ஆனால் கேரள சம்பவம் சிபிஐ தலைவர்கள் மனதில் தேர்தல் மூலம் ஆட்சிக்கட்டில் ஏறி மந்திரி சபைகள் அமைக்கும் தணியாத ஆசையை வளர்த்து விட்டது. முன்பு சிபிஐ.யாக இருந்த இன்றைய இருகட்சிகளிடமும் நாம் இத்தன்மையைப் பார்க்கமுடியும். கொள்கை அடிப்படையிலன்றி அரசாங்கப் பதவிபெறும் நோக்கத்துடனேயே கூட்டணிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

மக்கள் மேல் இவ்வெற்றி ஏற்படுத்திய பாதிப்பு பிரமாண்டமானதாயிருந்தது. வெற்றி கிடைத்ததுமே தொழிலாளிகளும் ஏழை உழவர்களும் களிப்பால் துள்ளினர். புதிய அரசாங்கம் தமது கோரிக்கையைப் பூர்த்தி செய்யும் என மிகவும் ஆழமாக நம்பினர். தொழிலாளி வர்க்கத்தினிடையில் மகத்தான பெருமித உணர்வும் தான் ஒரு பலசாலி வர்க்கம் என்ற உணர்வும் ததும்பியது. எளிய பாமரத் தொழிலாளிகள் வீதிகளில் போலீஸ்காரர்களிடம் 'இப்போ நீங்கள் எம்மேல் கைவைக்க முடியாது ஏனெனில் ஆட்சியிலிருப்பது எங்கள் அரசாங்கம். நம்பூதிரிபாடு எங்கள் தலைவர். ஆளும் வர்க்கம் நாங்கள்தான்' எனச் சொல்லிக்கொண்டிருந்ததைக் கேட்டிருக்கிறேன். அரசாங்கத்தின் மீது பரவலாக நல்லெண்ணம் நிலவியது. ஏழை உழவர்கள் மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் மகிழ்ச்சி உணர்வு பொங்கியது. நிலக்கிழார்களுக்கும் முதலாளிமார்களுக்கும் பிற்போக்காளர்களுக்கும் இவ்வெற்றி எவ்வளவு திகிலை ஏற்படுத்தியுள்ளது என்பதைக் காண அவர்களின் மகிழ்ச்சி மேலும் அதிகரித்தது. தேர்தல் முடிந்த ஆரம்ப வாரங்களில் கம்யூனிஸ்ட் கட்சி அமைச்சர்கள் மிக புரட்சிகரமான சொற்பொழிவுகள் ஆற்றினர். தொழிலாளர் போராட்டங்களுக்கு தம் ஆதரவு உண்டு என இடைவிடாமல் முழங்கினர்

படிப்பகம்

www.padippakam.com



ஆனால் இந்த வாக்குறுதிகள் எல்லாம் பேச்சோடு நின்றுவிட்டன. பனித்துறை ஒரு வலுவான ஐந்திரம். மாகாண பனித்துறை ஊழியர்களில் தலைமையானவர் தலைமைச் செயலர். இவர் மாகாண முதல்வரின் உத்தரவுகளுக்குக் கட்டுப்படுவதில்லை. மத்திய அரசின் உத்தரவுகளின்படியே செயல்படுவார், என்ற விவரங்களை நம்பூதிரிபாடும் அவரது மந்திரிகளும் விரைவில் கண்டு கொண்டனர். போலீஸ் சம்பந்தமாகவும் இதுவே கதை, மேலும் மத்திய அரசின் அங்கீகாரமில்லாமல் எந்த சட்டத்தையும் இயற்ற முடியவில்லை. எனவே சில பல சீர்திருத்தங்களைத் துவங்கி வைக்கக்கூட கம்யூனிஸ்டுக் கட்சி அமைச்சரவைக்கு அதிகாரம் இல்லை, என்பது தெரிந்தது. வேறு யதார்த்தமான திட்டங்களும் கட்சியின் கைவசம் இல்லாமையால் முட்டுச்சந்தில் மாட்டிக் கொண்டது. புரட்சிகரமான எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. கம்யூனிஸ்டுக் கட்சி ஆட்சி ஏறியதால் ஏற்பட்ட புதுமைக் கிளர்ச்சியுணர்வு சிறிது காலத்திலேயே வடிந்து விட்டது. சில இடங்களில் கொண்டாட்டம் முடிந்தது செயலற்ற தன்மை பரவியது. பிற இடங்களில் வெளிப்படையான கசப்பான ஏமாற்றம் நிலவியது.

சில மாதங்கள் கழித்து புது அரசாங்கத்துக்கு ஒரு முக்கியமான சோதனை ஏற்பட்டது. தலைநகரான திருவனந்தபுரத்துக்குப் பக்கத்தில் உள்ள கொல்லம் என்ற நகரில் ஒரு தொழிற்சாலைத் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தனர். அந்தத் தொழிற்சாலையில் இருந்த சங்கம் புரட்சிகர சோசலிசக் கட்சியின்(ஆர்எஸ்பி) தலைமையிலிருந்தது. வேலை நிறுத்தம் அரசாங்கத்துக்கு எதிராக ஏற்பட்டதல்ல, அந்தத் தொழிற்சாலையின் முதலாளிக்கு எதிராக ஏற்பட்டது. அது ஒரு தொழிற்சங்கப் போராட்டம். அப்போது நடந்தது எனக்கு ஒன்றுவிடாமல் நினைவிலிருக்கிறது. சுமார் 60 தோழர்கள் அடங்கிய சிபிஐ மாநிலக் கவுன்சில் கூட்டத்தில் நாங்கள் அமர்ந்திருக்கிறோம். வேலை நிறுத்தம் செய்த மூன்று தொழிலாளிகளைப் போலீஸ் சுட்டுக் கொன்றுவிட்டது, எனச் செய்தி வருகிறது. நாங்கள் திகைத்துப் போகிறோம். கம்யூனிஸ்டுகளின் ஆட்சியில் தொழிலாளிகள் போலீசால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். கூடியிருந்த தோழர்கள் அனைவரின் உடனடி எதிர்வினையும் எப்படி இருக்க வேண்டும்? நாங்கள் போலீஸ் சூட்டைக் கண்டிக்க வேண்டும். உடனடி விசாரணை நடத்த வேண்டும் இழப்பு நேர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்கு பகிரங்க ஆதரவு வழங்க வேண்டும். நாங்கள் அரசாங்கத்தில் இருக்கும்வரை இனி ஒருபோதும் இப்படி நிகழாது என்ற பொது உத்தரவாதம் அளிக்க வேண்டும்-இதுதான் எங்களில் இயல்பாய் உதித்த வர்க்க யோசனை. ஆனால் ஒரு விவாதம் துவங்கி இரண்டு மணிநேரம் நீடித்தது. முடிவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் எங்கள் ஆரம்ப எதிர்வினைக்கு முற்றிலும் மாறானவை. என்னைப் பொறுத்தவரை முழுக்காரியமும் நியாயமற்றது, என ஒரே வரியில் சொல்லி விடலாம். என்றாலும் அன்றைய சூழலைப் புரிந்துகொள்ள விளக்கம் அவசியம்.

பிற்போக்குக் குழுக்களும் கட்சிகளும் எங்களுக்கெதிராக ஒரு போராட்டம் துவங்கியிருந்தனர். கம்யூனிஸ்டு ஆட்சிக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் சேருங்கள் என்ற கலகமுழக்கத்துடன் அவ்வியக்கத்தை அவர்கள் நடத்தினர். எமது பலவீனங்களை அவர்கள் தமக்குச் சாதகமாகப்பயன் படுத்திக் கொள்ளத் துவங்கினர்.

படிப்பகம்

www.padippakam.com



இந்த இயக்கத்தில் முன்னணியில் நின்றவர்கள் கத்தோலிக்கப்பாதிரிகளும் நாயர் வகுப்பு வாதிகளும் ஆவர். (கேரளாவில் கத்தோலிக்கர் அதிகம்) ஆனால் வலது இடது சமூக ஜனநாயகவாதிகள் (சோசலிஸ்டுக் கட்சி, ஆர்எஸ்பி) உட்பட பிரிவினரும் அதில் இணைந்து கொண்டனர். அவ்வியக்கம் மக்களாதரவைப் பெறத் துவங்கியது. இந்தச் சூழ்நிலையில்தான் போலீஸ் துப்பாக்கிச்சூடு நடந்தது. ஆரம்பத்தில் தோன்றிய நிலப்பாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற தோழர்களின் தர்க்கம் என்னவென்றால் " நாம் போலீசைத் தாக்கினால் அவர்களின் உளஉரம் கெடும். அதனால் கம்யூனிச எதிர்புஷ இயக்கம் வலுப்பெற்றுவிடும். அப்படி நோந்தால் நமது அரசாங்கம் தூக்கியெறியப்படும். அந்நிலை ஏற்பட்டால் அது கம்யூனிச இயக்கத்துக்கு பலத்த அடி விழுந்ததாகும்." கடைசியில் கட்சி நிறைவேற்றிய தீர்மானம் போலீஸ் நடவடிக்கையை நியாயப்படுத்தியது. பிறகு சூடுநடந்த இடத்துக்கு ஒருவர் சென்று கட்சியின் நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதென முடிவாயிற்று. (ஆர்.எஸ்பி.யைத் தாக்கிப் பேசுவதும் போலீஸ் செயலை ஆதரிப்பதுமே கட்சி எடுத்த நலைபா• பாடு) கட்சியின் திறமையான மலையாளச் சொற்பொழிவாளர்களில் நான் ஒருவன் எனக் கருதப்பட்டேன். எனவே கேரளக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் பேச என்னைப் போகச் சொன்னார்கள். ந நான் அதற்கு மறுத்திருக்க வேண்டும். கவுன்சிலின் தீர்மானத்தை என்னால் சீரணிக்க முடியவில்லை என்னும் எனவே அதற்குச் சார்ந்து பேச என்னாலாகாது என்றும் அடித்துச் சொல்லியிருக்க வேண்டும், செய்யவில்லை கட்சித் தலைமை நான் போய் கட்சி நிலைப்பாட்டை ஆதரித்துப் பேச வேண்டும் என சம்பிரதாயமாக உத்தரவிட்டது. போனேன் ஒன்றரை மணிநேரம் சாரமில்லாமல் பேசினேன். மேடைப்பேச்சு, மூன்று தொழிலாளரின் மரணத்துக்கு ஆர்எஸ்பி.யின் பொறுப்பின்மையே காரணம் என்று குற்றம் சாட்டினேன். இந்தத் தொழிலாளிகள் சுட்டுக் கொல்லப்படும் நிலையைத் தோற்றுவித்த அவர்கள் இதற்குத் தாம்தான் பொறுப்பு என்பதை பொது மக்கள் முன் விளக்கிச் சொல்ல வேண்டும் என்றேன். வேலை நிறுத்தத் தலைவர்கள் மீது நேர்மையற்ற தாக்குதல்களைத் தொடுத்தேன். அன்றிரவு வீடு திரும்பினவுடன் உள்ளுக்குள் வருந்தினேன். என்னால் உறங்க முடியவில்லை. கட்சியின் சார்பில் பேச முடியாதென நான் மறுத்திருக்க வேண்டும் என்பதையே திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டிருந்தேன். பைத்தியமே பிடித்துவிடும் போலிருந்தது. என்னை இக்கதிக்கு ஆளாக்கிய கட்சித் தலைவர்களைத் திட்டி நொறுக்காமல் வந்துவிட்ட குறையை, என் மனைவியைத் திட்டித் தீர்த்தேன். மறுநாள் மூன்று இடங்களில் அதே சொற்பொழிவை ஆற்றவேண்டும் என்றார்கள். முடியாதென பட்டவர்த்தனமாய்த் தெரிவித்தேன். இம்முறை என் மறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது.

கேள்வி:- துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் உங்களைப் போன்ற பல கட்சி உறுப்பினர்களின் மனங்களைப் புண்படுத்திவிட்டது. சரி தொழிலாளி வர்க்கத்திலும் இது ஒரு நீடித்த பாதிப்பை ஏற்படுத்தியதா?

பதில்:- துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தி அங்கிருந்த மக்கள் ஆதரவில் ஒரு வடு ஏற்படுத்தியது உண்மையே. இருப்பினும் கொல்லம் சம்பவங்களின் பின்பும் எங்கள் ஆதரவாளர்கள் பெரும்பகுதியினர் ஏதும் நிகழாதது போல் தொடர்ந்து ஆதரவு தந்தனர்.

பிற்போக்காளருக்கும் ஆதரவு கூடியதுதான். ஆனால் இந்தக் கட்டத்திலும்கூட பாராளுமன்ற வேலைக்கும் மக்கட் பணிக்கும் இடையிலான இருங்கியல் உறவை சபிஜ தலைவர்கள் புரிந்து தொண்டிருந்தமல, பாராளுமன்ற வேலைகள் எப்போதுமே போராட்டத்தின் தேவைக்குக் கீழ்ப்பட்டே இருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டிருந்தால், இந்தக் கட்டத்திலும்கூட நாங்கள் எங்கள் பலத்தை நிலைநிறுத்தியிருக்க முடியும். ஒரு வேளை பன்மடங்காய் அதை உயர்த்தி இருக்கவும் முடியும் .இந்த முயற்சிகளின்போது நாங்கள் பதவியிலிருந்து விலக்கப்படலாம்(எப்படியும் இது நேர்வதே). ஆனால் எமது நிலை அளவிடற்கரிய பலம் பொருந்தியதாக ஆகியிருக்கும். முதலாளிய ஜனநாயகத்தின் வரம்புகள் பற்றி பொது மக்களுக்கு நாம் கற்பித்திருக்க இது வாய்பாகி இருக்கும். உண்மையான புரட்சி உணர்வை இது வளர்த்தெடுக்க முடியும்-ஆனால் நாங்கள் இந்த வழியில் செல்லவில்லை. அதேநேரத்தில்நம்பூதிரிபாடு 'உள்நாட்டு போர் நடக்கும்'என முன்னறிவிப்புச் செய்து சொற்பொழிவுகள் ஆற்றிக் கொண்டிருந்தார். தொழிலாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்துக்கு வந்துவிட்டது என்ற அவரது பார்வைக்கு மேற்படி சோதிடம் பொருத்தமானதே. கம்யூனிஸ்டு அரசாங்கத்தை மேலும் தாக்கிப் பலவீனப்படுத்த நம்பூதிரிபாடும் மேற்படி பேச்சுக்களைக் காங்கிரஸ் பயன்படுத்திக் கொண்டது. கேரள மாநில அரசாங்கத்தைக் கலைத்து விட்டு குடியரசாட்சியைத் திணிக்க மத்திய அரசு ஆலோசித்து வருகிறதுஎன பத்திரிகை அறிக்கைகள் ,காங்கிரஸ் தலைவர்களின் அறிக்கைகளிலிருந்து விரைவில் வெளிப்படையாயிற்று, கேரளாவில் பிற்போக்காளர்கள் தலைமையிலான மக்கள் இயக்கம் உச்சமடைந்தது. கல்லடி வாங்காமல் வெளியில் போகமுடியாத நிலமை விரைவில் சகத் தலைவர்களுக்கு ஏற்பட்டது-எனக்கும்தான். இச்சந்தர்ப்பத்தில் ஜவஹர் நேரு நிலைமையை நேரில் காணத் தீர்மானித்து கேரளாவிற்கு வருகை தந்தார். உடனடியாக அரசாங்கத்தை பதவியிறக்குமாறு கோரி அவரை அக்கோரிக்கையின்னர் முற்றுக்கை செய்தனர். எங்களையும் அவர் சந்தித்தார். அரசாங்க அமைச்சர்களுடனும் கம்யூனிஸ்ட் கட்சி மாநில்க் குழுவின் பிரதிநிதிகளுடனும் தனித்தனியாகச் சந்தித்து பேசினார். பிரதிநிதிக் குழுவின் நானும் ஒருவன். இந்த விவாதங்களின் போது எங்களிடம் அவர் கேட்ட முதல் கேள்வி -எனக்கு இன்னும் மறக்கவில்லை-"அது எப்படி அய்யா இவ்வளவு குறிகிய காலத்தில் மக்களிடமிருந்து இவ்வளவு அற்புதமான முறையில் தனிமைப்பட்டுப் போனீர்கள்? பின், வாக்காளப் பெருமக்களின் தீர்மானத்துக்கு விட்டுப் பி புதிய் தேர்தல்கள் நடத்த சம்மதமானால் கம்யூனிஸ்டு அரசாங்கம் தொடாந்து பதவியிலிருக்கலாம் என்று யோசனை கூறினார், நேரு முன்வைத்த திட்டத்தை விவாதிக்க ஒரு சிறப்பமர்வை மாநிலக்குழு கூட்டியது. நம்பூதிரிபாடு வலியுறுத்தியதின் பேரில் அந்தத் திட்டத்தை நிராகரிப்பதென முடிவு செய்யப்பட்டது." "எல்லா மாகாணங்களிலும் புதிதாய் தேர்தல் நடத்துவதானால்தான் கேரளாவிலும் நடத்தச் சம்மதிப்போம் ! அப்பவும் நான் இது தவறான தீர்மானம் என உணர்ந்தேன். நேருவின் திட்டத்தை நாங்கள் ஒப்புக்கொண்டிருக்க வேண்டும். எங்களை ஆசுவாசப்படுத்திக் கொண்டிருக்க அவகாசம் ஈட்டியிருக்க வேண்டும். பின் எதிர்கட்சிகளுடன் மோதலில் புகுந்திருக்க முடியும். எதிர் கட்சிகள் யார்-பிற்போக்காளர்களும் கட்சிதாவும் சுயநலவாதிகளும் சமூகஜனநாயக வாதிகளுமாகிய கதம்பம்தானே?

www.padippakam.com



இரண்டாவதாக, தேர்தல்களை ஒப்புக் கொண்டு அது நடக்கையில், கம்யூனிஸ்டு அரசாங்கம் அதிகாரத்திலிருந்திருக்கும். இதனைக் கொண்டு பணித்துறை ஊழியர்களும் போலீசுகளுமாகிய அரசயந்திரம் எங்களுக்கு எதிராய்ச் செயல்படுவதை முற்றாகத் தடுத்திருக்க முடியாதிருந்தாலும் அவர்களை ஓரளவுக்காவது கட்டுப்பாட்டில் வைக்க முடிந்திருக்கும். எப்படியோ–நாங்கள் மறுத்துவிட்டோம். 1959–ல் அரசாங்கம் பதவி நீக்கப்பட்டுவிட்டது. ஆனால் ஒன்றரை ஆண்டுகள் கழித்து நடந்த அடுத்த தேர்தலில் எமக்குக் குறைவான பதவி இடங்களே கிடைத்தாலும், அதிகமான மக்களின் வாக்குகள் கிடைத்தன. ஆக தேர்தல் ரீதியில் நாங்கள் தோற்கடிக்கப்பட்டாலும் மக்களின் பார்வையில் நாங்கள் தே.. உண்மையில் தோற்கவில்லை, எங்களின் இத்தனை தப்பு தவறுகளுக்கும் பின்னும் மக்கள் எங்களை ஆதரித்தனர்.

கேரளாவில் தேர்தலில் சிபிஐ பெற்ற வெற்றி அதனைச் சந்தேகமின்றி ஒரு தேசிய சக்தியாக்கிற்று. அதன் மதிப்பு பன்மடங்காக உயர்ந்தது. பிர்சுவா வியாக்யானிகளின் புளித்துப் போன பத்திரிகைத் தலைப்புகளுக்குப் பதிலளிக்குமுகமாக கம்யூனிஸ்டு ஆர்வலர்கள் "நேருவுக்கு அடுத்தது நம்பூதிரிபாடுதான்" என முழக்கமிட்டனர். இந்த வகையில் கேரளாவின் முக்கியத்துவம் என்னவென்றால்–காங்கிரசைத் தோற்கடிக்க முடியும். அதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்ற மாற்று உண்டு, என்ற நிச்சய உணர்வு ஏற்பட்டதாகும். அன்றைய சர்வதேசச் சூழ்நிலையில் இது ஒரு முக்கியமான காரணியாகும். தொழிலாளர்கள் கொல்லப்பட்டதற்கு "எம்எஸ் அமைச்சரவை "பரிகாரம்" கண்ட விதத்தைப் பற்றி சிபிஐ.க்குள்ளேயே விமர்சனங்கள் எழுந்தன. கேரளக் கட்சியை விமர்சித்து மேற்கு வங்க சிபிஐ மாநிலக்குழு கடிதம் எழுதியது. இருந்தாலும் வேறெந்த சிபிஐ தலைவருக்குமிட நம்பூதிரிபாடுக்கு பெரிய ..ட்டம் வந்தது. வெற்றிகரமான கேரள சிபிஐ.யின் தலைவர் என்ற ரீதியில் நம்பூதிரிபாடு தேச அளவிலான பிரமுகராகிவிட்டார். 1958ல் அமிருதசரசில் ..டிய கம்யூனிஸ்ட் கட்சிக் காங்கிரஸ் அவரை ஒரு நாயகனாகப் போற்றியது. தேர்தல் முறையில் அதிகாரபூ அரசதிகாரம் வெல்ல முடியும் என அறிவித்தது. சோவியத் கட்சி வளர்த்து வந்த நிலைப்பாடுகளுக்கு இவ்வறிவிப்பு கச்சிதமாய்ப் பொருந்தியது. மூலத் தீர்மானத்துக்கு சில திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. சில தோழர்கள் சில சந்தேகங்களெழுப்பினர். மற்றபடி மொத்தத்தில் ஒரேகருத்து நிலவியது. அமிருதசரப் பாதை இனி தேச அளவில் கடைப்பிடிக்கப்படும்.

கேள்வி:– சோசலிச மாற்றத்தைக் கொண்டு வருவோம் என வாக்குறுதி வழங்கும் கட்சிகள் தேர்தல் வெற்றிகளிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் நிலையில் எழுகின்ற போர்த்தந்திரப் பிரச்சனைகளைப் பற்றித் தலைமைக்குள் ஒருபோதும் சரியான விவாதம் நடந்ததில்லை என்கிறீர்களா? கேரள சிபிஐ.யிலாகட்டும், மேற்குவங்க சிபிஎம்,மிலாகட்டும் பிற்பாடு சிலியின் 'மக்கள் ஒற்றுமை' (                    )யிலாகட்டும், காணப்படும் அடிப்படையான குறைபாடு என்னவென்றால், மக்களதிகாரத்துக்கான சோவியத்வகை அமைப்புக்களை உருவாக்கும் அவசியத்தை அவை எதுவும் புரிந்து கொள்ளவில்லை என்பதுதான். அத்தகைய சோவியத் அமைப்புக்களே முதலாளிய அரசிலிருந்து சுயேட்சையாக மக்களை ஒழுங்கமைக்க முடியும். தருணம் வாய்த்தால் அரசுக்கு எதிரான மக்கள் அமைப்புகளாகவும் அவற்றையே பயன்படுத்த முடியும்

படிப்பகம்

www.padippakam.com



அல்லவா? ஆனால் பல பத்தாண்டுகளாகவே கம்யூனிஸ்டுக் கட்சியின் போர்த் தந்திரத்தில் இந்தப்பரிமாணத்தை சுத்தமாகக் காணோமே?

பதில்:- நீங்கள் முன்வைக்கும் இப்பிரச்சனைகள் மிக முக்கியமானவை, அப்படியானவை, ஆனால் நடைபெற்ற விவாதங்களில் இப்பிரச்சனைகள் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பதை வருத்தத்துடன் ஒப்புக்கொள்கிறேன். மக்களை அவர்களின் சொந்த அதிகார அமைப்புகள் (அதாவது சோவியத் போன்றவை) மூலமே திரட்ட வேண்டும் என்றஇந்த அடிப்படை முக்கியத்துவமுடைய நிலைபாடு காணாமற்போனது ஸ்டாலியத்தின் விளைவே ஆகும். ஸ்டாலினியத்தில் கட்சி மட்டுமே மக்களின் ஒரே பிரதிநிதியாகக் கருதப் பட்டது.

என்னுடைய தனிப்பட்ட அரசியல் பரிணாமத்தைப் பற்றிச் சொன்னால், எனக்கு 1956-க்குப் பின் தொடர்ந்து ஐயங்கள் பெருகிச் சென்றன. ஸ்டாலின் பிரச்சனை குருச்சேவின் உரையைப் படித்தபின் தீர்ந்துபோனது. ஆனால் சர்வதேச விவகாரங்களில் நான் இன்னும் முழுக்கக் குழம்பியவனாகவே இருந்தேன். உதாரணமாக ஹங்கேரி பற்றிய எனது நிலைபாடு முற்றிலும் வைதிகத் தன்மையிலேயே இருந்தது. எல்லா முதலாளிய பத்திரிகைகளிலும் சோவியத் நாட்டை நீளமாகத் தாக்கி எழுதியிருந்தார்கள். அதை மறுக்குமுகமாக நான் 'ஹங்கேரியில் நடந்ததென்ன?' என்ற பிரசுரத்தை எழுதினேன். ஆக என் சிந்தனை படிப்படியாகவே மாறிவந்தது. நிறையப் படிக்கவேண்டியதன் தேவையை அடிக்கடி உணர்ந்தேன். ஆனால் அப்போது இந்தியாவில் படிக்க கிடைத்தவை மிக்கக் குறைவே. 1956-ல் நான் ஸ்டாலியத்திலிருந்து முறித்துக் கொண்டதாக நினைத்தேன். ஆனால் இன்று திரும்பிப் பார்க்கும் போது அது உண்மையல்ல என்பது புலனாகிறது. அமிருதசரஸ் பாதை, கேரள அரசாங்கம் ஆகிய சமாச்சாரங்கள் எனது சந்தேகங்களுக்கு வலுவூட்டின. என்றாலு? சந்தேகங்களாகவே நின்றுபோயின. தனிப்பட்ட ஐயங்கள் பலவும் கட்சிக்குள் கூட வெளிப்படுத்தப்படவில்லை. அன்றைய கம்யூனிஸ்டுகள் பலரின் கதையும் இதுவே என நான் கூறுவேன். ஆனால் அன்றைய நிலையில் சிபிஐக்கு மாற்று நிலவவில்லை.

1958-ல் எனக்கு சோவியத் நாட்டைச் சுற்றிப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது என்னில் மேலுமொரு மாற்றம் நிகழ்ந்தது. ஆப்பிரிக்க ஆசிய எழுத்தாளர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்திய எழுத்தாளர் பிரதிநிதிக் குழுவில் ஒரு உறுப்பினனாக நான் 1958 இல் தாஷ்கண்ட் சென்றேன். சீனப் பிரதிநிதிகளும் அங்கு வந்திருந்தார்கள். சோவியத் நாட்டுடனான தம் வேறுபாட்டை வெளிப்படையாகவே பேசிக் கொண்டார்கள். சோவியத் தரப்பை பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அந்நாட்டில் ஏற்பட்டுள்ள பிரமாண்டமான முன்னேற்றங்களை மறுக்க முடியாது. ஆனால் அதன் மறுபக்கம் என்னை நிலைகொள்ளாமற் செய்தது. இந்தியப் பிரதிநிதிகளுக்கு மாஸ்கோவில் சிறப்பு வரவேற்பு தரப்பட்டது. அதில் குருச்சேவ் கலந்து கொண்டார். விழாவில் கலைநிகழ்ச்சி நடந்தது. கலைநிகழ்ச்சியைப் பார்த்து க் கொண்டிருந்த நான் எனக்குப் பக்கத்திலிருந்த காலிநாற்காலியில் குருசேவ் வந்து அமர்ந்துகொள்ளவேஇ ஒரு கணம் திடுக்குற்றேன். பின் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவருடன் விவாதித்து எனது ஐயங்களைப் போக்கிக் கொள்ள வேண்டுமென முடிவு செய்தேன்.

படிப்பகம்

www.padippakam.com



அக்கால கட்டத்தில் பாஸ்டர்நாக் விவகாரம் பரவலான கவனத்தை ஈர்த்திருந்தது. எனவே 'பாஸ்டர்-நாக்குக்குச் (?) செய்தது நியாயம்தானே' என நான் குருச்சேவிடம் வினவினேன். புரட்சி நடந்த 50 ஆண்டுகளுக்குப் பிறகும் பாஸ்டர்நாக் எழுதிய ஒரு நாவலைக் கண்டு சோவியத் அரசாங்கம் பயப்படுகிறது என்றால் அது எப்படி? நான் ஒரு மார்க்சியன் என்ற வகையில் பாஸ்டர்நாக்கின் அரசியலுக்கு முரண்பட்டவன் என்றாலும் எழுத்தாளன் என்ற முறையில் அவருக்குச் செய்யப்பட்டதை என்னால் நியாயமெனப் பார்க்க முடியவில்லை என்றேன். சிறுகதைகள், கவிதைகள் உள்ளிட்ட தாம் எழுதிய எழுத்துக்களுக்காக இந்தியாவில் கொதிப்படைந்த எதிர்ப்பாளர் பலர் சிறைத்தண்டனை பெற்றதை புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் சோவியத் நாட்டில் பாஸ்டர்நாக் விசயத்தில் இப்படி நடப்பதை எப்படிப் புரிந்து கொள்வது? என்றேன். குருச்சேவ் எல்லாப் பொறுப்புக்களையும் மறுத்தார். பாஸ்டர்நாக் பிரச்சினை எழுத்தாளர் சங்கத்தின் பிரச்சினை, அங்கே கேளுங்கள் என்றார். இப்பிரச்சினையை விவாதிக்க அவருக்கு ஆர்வமில்லை என்பது தெரிவாயிற்று. அடுத்து சோவியத் நாட்டில் குடிப்பழக்கம் இருப்பது பற்றியும் கேட்டேன். மதுவிலக்கு கொண்டுவரும் உத்தேசம் உண்டா என்றேன். உண்டு என்றார். "ஆனால் மதுவைத் தடை செய்தால் கள்ளச் சாராயத் தொழில் உடனடியாகப் பெருகிவிடும், அது இப்போதுள்ளதைவிட பெரும்பிரச்சனையாகிவிடு?" என்றார். உடனே நான் சொன்னேன்: "நீங்கள் புத்தக வெளியீடுகளைத் தடைசெய்தால் சட்டவிரோத வெளியீடுகள் உடனடியாகப் பெருகிவிடும். அது இப்போதுள்ளதைவிட பெரும்பிரச்சனையாகிவிடும்! இப்போது மிகவும் எரிச்சல் அடைந்த மனிதர் நடனத்தைப் பார்ப்போமா? என்றார். 'ஸ்டாலினிய நீக்கத்தின்' வரம்புகளைப் புரிந்து கொள்ளத் துவங்கினேன். யூகோஸ்லாவியா, சீனா ஆகியவை பற்றி விவாதிக்க முயன்றதும் பயனற்றுப் போனது. எழுத்தாளர் சங்க அலுவலர்களுடன் விறுவிறுப்பான விவாதங்கள் நடந்தன. விளைவுதான் ஏமாற்றம். எனது பிரமைகள் மேன்மேலும் அகன்றுவந்தன.

கேள்வி:- சோவியத்நாடு தவிர வேறுநாடுகளுக்குப் போயிருந்திருக்கிறீர்களா? மக்கள் சீனத்துக்குப் போகும் வாய்ப்பு கிடைத்ததுண்டா? சீனப்புரட்சி சமீபகாலத்ததும் ஒரு வகையில் இந்தியாவின் பிரச்சனைகளுக்கு மேலும் சம்பந்தப்பட்டதும் ஆயிற்றே?

பதில்:- எனது சோவியத் ஒன்றியப் பயணத்துக்குப் பின் வெளிநாடுகளுக்குச் செல்லவும் அந்நாட்டுத் தோழர்களுடன் விவாதிக்கவும் எனக்கு அதிக வாய்ப்புகள் கிடைத்தன. எனது அரசியல் வளர்ச்சிக்கு வெளிநாட்டுப் பயணங்கள் மிக முக்கியமான உதவி புரிந்தன. 1960ல் ஹனோயில் நடந்த வியட்நாம் தொழிலாளர் கட்சியின் மூன்றாம் காங்கிரசில் நான் கலந்து கொண்டேன். இந்தியக் கட்சியிலிருந்து நானும் ஹரிகிருஷ்ணன் கோனாரும் பிரதிநிதிகளாகச் சென்றிருந்தோம். இந்தியக் கம்யூனிஸ்டுக்களின் அன்பு வாழ்த்துக்களைக் காங்கிரசுக்குத் தெரிவித்துக் கொண்டோம். பின் பலநாட்டுத் தோழர்களுடனும் விவாதித்தேன். அது மிகக் கிளர்ச்சிகரமான காலம். தென்வியத்நாமில் தேசிய விடுதலை முன்னணி (என் எல் எப்) அமைக்கப்பட்டிருந்தது. கம்யூனிஸ்டுகளின் கூட்டங்களில் சீன-சோவியத் தகராறே தலையாய பிரச்சனை ஆகத் துவங்கியது. சோவியத் தூதுக்குழு தம் நிலைப்பாட்டை விளக்க எம்மை விருந்துக்கு அழைத்தது. அவர்கள் நிலைப்பாடு நமக்கு ஏற்கனவே தெரிந்ததுதான். விவாதம் மறுநாளும் நடந்தது. நானும் கோனாரும் ரஷ்யர்களிடம் சற்று நர்மசங்கடமான கேள்விகளைக் கேட்டோம். சீன சோவியத்

படிப்பகம்

www.padippakam.com



சீன சோவியத் தகராறின் ஆரம்ப காலகட்டத்திலிருந்த ஒரு நல்ல அம்சம் என்னவென்றால் 20களின் பின் முதல் முறையாக கம்யூனிஸ்ட் இயக்கத்துக்குள் அடிப்படை விசயங்களை விவாதிக்க அப்போது அனுமதிக்கப்பட்டதுதான்.

ஒரு நீண்ட விவாதம் நடத்த சீனக்குழு எம்மைப் பீக்கிங்குக்கு அழைத்தது. நாங்கள் காண்டனுக்குப் பறந்தோம். அங்கிருந்து ஒரு தனி விமானத்தில் பீகிங் சென்றோம். சீனத் தலைநகரில் மொத்தம் 4நாட்கள் இருந்தோம். சூஎன் மாயிடமும் பிறகட்சித் தலைவர்களிடமும் ஆக ஐந்தரை மணி நேரம் விவாதித்தோம். விவாதத்தின் முக்கிய விசயம் சீன-இந்திய எல்லைத் தகராறு. பழைய நிலப்படங்கள், எல்லை ஒப்பந்தங்கள் சம்பந்தமான மிக நுட்பமான விளக்கங்கள் போன்றவற்றைப் பேசுவதில் ஒரு மணி நேரம் நகர்ந்தது. எனவே எல்லைத் தகராறில் சீனத் தலைப்பே சரி என முடித்தனர். என் கருத்துக்களை நான் சீனத் தோழர்களிடம் ஆணித்தரமாகத் தெரிவித்தேன். சட்டரீதியாக புவியியல் ரீதியாக வரலாற்று ரீதியாக நீங்கள் சரியாயிருக்கலாம். அரசியல் ரீதியாக அணுகுவதே எனக்கு முக்கியமாகப்படுகிறது. மனிதர் வசிக்காத இப்பிரதேசம் பற்றிய தகராறில் நமக்குக் கிடைக்கும் அரசியல் நன்மை யாது? பாகிஸ்தானுடன் நீங்கள் ஒரு ஒப்பந்தத்துக்கு வந்து கொஞ்சம் நிலப்பரப்பை விட்டுக் கொடுத்தீர்கள். அதையே ஏன் இந்தியா சம்பந்தமாகவும் பின்பற்றக்கூடாது? அப்படிச் செய்தால் இந்தியப் பிற்போக்காளர்கள் சீன எதிர்ப்புத் தேசிய வெற்றியைப் பரப்பி வருவதற்குப் பங்கம் உண்டாகும். இந்தியாவிலுள்ள இடதுகசாரி இயக்கத்துக்குப் பலமுண்டாகும். சோசலிச அரசுகள் எல்லைத்தகராறுகளைத் தீர்க்கும் முறையே அலாதி பார்த்தீர்களா என நாம் உலகுக்கு உணர்த்த முடியும். சீனப்புரட்சிக்கும் இந்திய மக்களுக்கும் உறவு வலுப்பட இது உதவும். பின்லாந்து போன்ற முதலாளிய அரசாங்கங்கள் அல்லது ஆப்கன் போன்ற முதலாளித்துயத்துக்கு முந்திய முடியரசுகள் ஆகியவற்றிடம் லெனின் நடந்து கொண்ட பங்கு இத்தகையதே என விளக்கினேன். அவ்வாறு நடந்து கொண்டதன் மூலம் லெனின் ரஷ்யப் புரட்சியை வலுப்படுத்தினார். பரந்துபட்ட மக்களிடம் அதன் செல்வாக்கையும் வலுப்படுத்தினர் என்றேன். லெனின் செய்தது சரிதான் என சட்டெனப் பகன்றார் சூ. "ஆனால் அதற்குக் காரணம் அன்று சோவியத் அரசு தனித்திருந்தும் 'சோசலிசமுகாம்' இல்லாதிருந்ததுமே ஆகும் என்றார். உண்மையில் லெனினின் நோக்கம் இ அந்நாட்டு மக்களுடன் நட்புறவுகளை வளர்ப்பதே ஆகும். அந்நாடுகளின் ஆளும்வர்க்கங்கள் சோவியத் நாட்டை தம் நாடுகளை விழுங்க வரும் வல்லரிசாகத் சித்தரிக்க இடந்தரக்கூடாது என்ற நோக்கமே ஆகும். கைவசம் என்னிடம் தேவையான ஏடுகள் இல்லையாயினும், லெனினின் உண்மையான நோக்கம் இதுவே எனக்காட்டப் போதிய ஆதாரங்கள் உள்ளன. என் நான் பதிலுக்கு வாதிட்டேன். கடைசியில் தன்னால் இதை ஒத்துக் கொள்ள முடியாதென்றார். சீனத் தோழர்கள் மீதும் அவர்களின் புரட்சி மீதும் எனக்கு அளவுகடந்த அக்கறை உண்டு. எனவே நான் விவாதத்தை அத்துடன் முடித்துக் கொள்ள விரும்பவில்லை. எனவே சூவிடம் கேட்டேன்," தகராறிலிருக்கும் எல்லை பகுதி வழியாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வந்து உங்களைத் தாக்கலாம் என்ற அபாயத்துக்கு இடமுண்டா?" அதற்கு சூ சொன்னார்., இப்போது அபாயம் அமெரிக்காவிடமிருந்து அல்ல, நேருவின் அரசாங்கத்திடமிருந்துதான் வருகிறது".

படிப்பகம்

www.padippakam.com



விவாதத்தின் அடுத்த விசயம் சீன-சோவியத் தகராறு

"அரசியல் மாறுபாடுகளைக் காரணமாக்கி ஒரேநாளில் சோவியத் நாடு சீனாவிலிருந்து தன் தொழில் நுட்பக்கரங்கள்களைத் திருப்பி எடுத்துக் கொண்டது. இது சோவியத் நாடு சீனாவுக்கிழைத்த துரோகமாகும்" என்று அழுத்திக் கூறினார் சூ. இதுபற்றி அவர் மிகுந்த கசப்பபை வெளியிட்டார். ப்ளூ பிரிண்டுகளைக் கூடத் தூக்கிச் சென்றுவிட்டார்கள் என முறையிட்டார். ரஷ்யர் செய்தது முற்றிலும் தவறே என உணர்ந்தேன். ஆனால் அதை வாய்விட்டுச் சொல்லவில்லை. ஏனெனில் இரு பெரும் நாடுகளுக்கிடையில் அணி சேர நான் விரும்பவில்லை. சீனாவிடம் சோவியத்நாடு நடந்து கொண்ட முறையையும் இந்தியாவிடம் சீனா (எல்லைத்தகராறில் சூ) நடந்து கொண்ட முறைடியயும் பற்றி எண்ணிச் சோர்வடைந்தேன். சூவின் போக்கில் இழையோடிய தேசிய வெறியை உணராதிருக்க முடியவில்லை. கோனார் சீனர் சார்பாக நிலை எடுத்துக் கொண்டார். இந்தியா திரும்பினதும் பல ஆய்வுக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து சீனரின் கருத்துக்களை விளக்கினார்.

கேள்வி:-அந்நாட்களில் வியத்நாமியத் தோழர்களின் நிலைப்பாடு எப்படி இருந்தது?

பதில்:- இன்று அவர்களுக்குள்ள அதே நிலைப்பாடுதான். "இந்தத் தகராறு தொடர்ந்தால் முரண்பாடு அதிகரிக்கவே செய்யும். அது ஏகாதிபத்தியத்துக்கே உதவுவதாய் முடியும்" என்பது அவர்களின் நிலைப்பாடு. அப்படிப்பார்த்தால் ரஷ்யரையும் சீனரையும் விட வியத்நாமியர் தேவலை. வியத்நாமியப் போராட்டத்தின் மீது சோவியத் நாடும் சீனாவும் கொண்டிருந்த மனோபாவமும் உண்மையில் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருக்கவில்லை. பீகிங்குக்குப் புறப்படுமுன் நாங்கள் ஹோசிமினுடன் நீண்ட நேரம் விவாதித்தோம். பேச்சுப் போக்கில் வியத்நாம், இந்தியா, சீன-சோவியத் தகராறு பற்றியெல்லாம் பேசினோம். கடைசி விவகாரம் பற்றிச் சொல்லும்போது ஹோசிமின், தனக்கு சோவியத் நாடு, சீனம் இரண்டின் போக்கும் பிடிக்கவில்லை என்றார். அவர்களின் சண்டை வளர்ந்து கொண்டே போய் சர்வதேசத் தொழிலாளிவர்க்க இயக்கத்துக்கே உலைவைக்கும் நிலை வரும் என்றார். இவ்விசயத்தில் அவர் மிகுந்த கரிசனம் கொண்டு காணப்பட்டார். "இத்தகராறைக் கிளறிவிடும்படியாக எதையும் செய்யாதிருக்க வேண்டும்" என்றார். வியத்நாமியர் தம் நிலைப்பாட்டை ஏன் அச்சேற்றிப் பரப்பக் கூடாது? இயக்கத்தை ஒன்றுபடுத்தி வைத்திருக்க அது ஒரு உதவிகரமான வழியாயிருக்குமே? என கேட்டேன். அவர்களின் தகராறில் குறுக்கிடக் கூடாதெனத் தாங்கள் முடிவெடுத்திருப்பதாக அவர் சொன்னார். மூன்றாம் உலகப் போர் பற்றிய ஆய்வுரைகள் (8) பற்றி நகைச்சுவை தொனிக்கப் பேசினார். மூன்றாம் உலகப் போருக்குப் பின் சீனாவில் சிலராவது மிஞ்சலாம். சின்ன நாடான வியத்நாமில் என்ன மிஞ்சும்? ஓர் ஆள்கூட மிஞ்சாது. எனவே அக் கோட்பாட்டை நாங்கள் ஆதரிக்க முடியாது. சுத்த தற்காப்பு நோக்கம் கருதித்தான் என்றார். அவர்பேச்சு நெடுக இழிவரல் விரவியிருந்தது. நான் சந்தித்த கம்யூனிஸ்ட் தலைவர்கள் எல்லாரிலும் அனைவரிலும் மிகவும் பண்பட்டவரும் வசீகரமானவரும் அவர்தான் என்பதைச் சொல்லியே ஆகவேண்டும். வியத்நாமுக்கு வந்த தூதுக் குழுவினரை ஆறு மொழிகளில் வரவேற்று அவர் பேசினது என்னை மிகவும் கவர்ந்தது. அவை வியத்நாமிய, க சீன, ரஷ்ய பிரெஞ்சு, ஆங்கில, ஸ்பானிஷ் மொழிகள்.

www.padippakam.com



30களில் இந்தியக் கட்சியிலும் பெரியதாய் இல்லாதிருந்த உங்கள் வியத்நாமியக் கட்சி வெற்றிபெற, நாங்கள் தோற்றுப் போனதேன். அதற்கு அவர் ஒரு அருமையான பதில் அளித்தார். "உங்களுக்கு மகாத்மாகாந்தி இருந்தது போல இங்கு நான்தான் மகாத்மாகாந்தி" கம்யூனிஸ்டுகளின் தலைமை உருவாக, ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தைத் தாங்கள் பயன்படுத்திக் கொண்ட விதம்பற்றி விளக்கிச் சென்றார். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் அவர்கள் தலைமைச் சக்தி ஆனார்கள். சோசலிசம் நோக்கி இயங்கினார்கள். அவர் கூறியதன் உள்ளர்த்தம்–இந்தியாவில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்துக்குத் தலைமை தாங்கியது காந்தியும் காங்கிரசும். இதைச் செய்யாததே சிபிஐ.யின் தவறு என்பதாகும். வியத்நாமிய முதலாளிய வர்க்கத்தின் பலவீனம்பற்றி விளக்கினார். (பிற வியத்நாமியத் தலைவர்களும் இதைக் குறிப்பிட்டனர்) இதற்கு நேர்மாறாக இந்திய முதலாளிய வர்க்கம் பலம் கூடியது.

வெளிநாட்டுப் பயணங்களே என் கண்ண மனதைத் திறந்து விட்டவை. ஆரம்பதித்தில் சோவியத் நாட்டுக்கும் பிற முதலாளியமல்லா நாடுகளுக்குமே போய்வந்தேன். உடலநலக் காரணங்களுக்காக 1962ல் மீண்டும் சோவியத் நாடு சென்றேன். 1940-45ல் சிறையிலிருந்த காலத்தில் நான் கொஞ்சம் ரஷ்யமொழி கற்றிருந்தேன். 'பிராவ்தா'வை எழுத்துக் கூட்டி வாசிக்கக் கற்றிருந்தேன். மாஸ்கோவைக் கைப்பற்ற முயன்று தோற்று பின்வாங்கியதன் ஆண்டுவிழா நடந்தது. ஜார் மன்னனின் வெற்றியைக் கொண்டாடுவதே எனக்கு விசித்திரமாய்ப் பட்டது. அதைவிட பிழையாகப்பட்டது, பிராவ்தா ஏட்டில் நெப்போலியனுக்கு எதிராக வரைந்திருந்த நீண்ட வசைமாரி. கட்டுரையின் தேசியவாத உக்கிரம் பயங்கரமாயிருந்தது. பிரெஞ்சுப் புரட்சியின் சூழலில் நெப்போலியன் எதிர்ப்புரட்சியாளன்தான். ஆனால் ஜாரிய முடியாட்சிக்கு எதிரான போரில் ஜாருடனா நெப்போலியனுடனா என்றால் நெப்போலியனுடன்தான் சாரவேண்டும். திரிக்கப்பட்ட கலப்படமான வடிவிலேனும், தான் வென்றபகுதிகளுக்கு அவன் முதலாளிய ஜனநாயகப் புரட்சியைக் கொண்டு சென்றான். பிற்போக்கு ஐரோப்பா முழுவதும் அவனுக்கெதிராக அணிவகுத்தது. இரண்டாம் உலகப்போர் முடிவில் கிழக்கு ஐரோப்பாவில் முன்னேறிச் சென்ற செஞ்சேனை அங்கு முதலாளிய உற்பத்தி முறையை அழித்ததை நெப்போலியனின் படையெடுப்புடன் ஒப்பிடமுடியும். மருத்துவமனையில் படுக்கையிலிருந்தபடி அ பிராவ்தா கட்டுரையை நான் வாசித்தேன். வேறு வேலையும் அதிகம் இருக்கவில்லை. எனவே பிராவ்தா பதிப்வாசிரியருக்கு ஒரு கடிதம் எழுத முடிவு செய்தேன். அதில் கட்டுரையின் பிற்போக்குத் தன்மைபற்றி அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்தேன். அதன்பின் தினமும் பிராவ்தா தினசரி யை எடுத்து எனது கட்டுரை அச்சாயுள்ளதா எனத் தேடுவது வழக்கமாயிற்று. ஏமாந்ததே மிச்சம். ஒருவாரம் கழித்து சிபிஎஸ்யு.வின் மத்தியச் செயற்குழு உறுப்பினர் ஒருவர் என்னைப் பார்க்க வந்தார். உடல்நலம் பற்றி பகட்டாக விசாரித்துக் கொண்டார்–ஏதோ அதற்காகவே வந்ததுபோல். பின் பிராவ்தாவுக்கு நான் எழுதியிருந்த கடிதத்தைத் தான் படித்ததாகச் சொன்னார். பதிப்பாசிரியருக்குக் கிடைத்த கடிதம் அவருக்குக் கிடைத்தது எப்படி என்றேன். எனது கேள்விக்குப் பதில் சொல்லவில்லை அவர். அதற்குப் பதிலாக பிராவ்தாவின் மதிப்பீடு சரிதான் என்று வாதிட்டார்.

www.padippakam.com



அவருடனோ வேறெந்தத் தோழருடனோ பிரான்ஸில் இதுபற்றி விவாதிக்க நான் தாராளமாகத் தயார் என்றும் மருத்துவமனையிலிருந்தபடி றன்டின் சிரமமற்ற முறையில் வாதிடத் தயாரில்லை என்று மட்டும் சொல்லி நிறுத்தினேன். இதெல்லாம் கடுமையான உள்நோயின் வெளி அறிகுறிகளே. ஆனால் என் கண்கள் திறந்து கொண்டது இப்படித்தான். உங்களுக்கு மட்டும் திறந்த மனம் இருந்தால் சோவியத் நாட்டிடமிருந்தேகூட வேண்டிய பாடங்கள் படிக்கலாம்.

அடுத்த ஆண்டுகளில் எனது பரிணாமம் தொடர்ந்தது. 1967-ம் கட்டத்தில் இரண்டு தடவை மேற்கு ஐரோப்பா சென்றேன். இத்தாலியில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் சிலருடன் மட்டுமின்றி 9. தோழர்களுடனும் விவாதித்தேன். பிரான்சில் கரோடி போன்ற கருத்து மாறுபாட்டுக் கம்யூனிஸ்டுகளுடனும் புதிய இடதுத் தோழர்கள் சிலருடனும் விவாதித்தேன். மே 1968ன் பின்விளைவுகளை நேரடி அனுபவத்தில் உணர்ந்தேன். பின் பிரிட்டன் சென்றேன். நான் மேற்கு ஐரோப்பாவில் பயணம் செய்த காலம் அங்கு புதிய எழுச்சிகளும் புரட்சிமயமாதலும் பெருமளவில் ஏற்பட்டு வந்த காலம். அங்கும் எனது அரசியல் வளர்ச்சி தொடர்ந்தது. வளர்ச்சிகளைத் திறந்த மனதுடன் ஆராய விரும்பினேன். எனவே நடப்புப் போக்குகள் அனைத்தின் பிரதிநிதிகளையும் சந்தித்து அவர்களுடன் விவாதித்தேன். பிரான்சில் கடைத்தெருக்களில் அதி இடதிலிருக்கும் பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் (      ) இடையிலான வேறுபாடுகளைக் கண்களால் கண்டேன். அதி இடது ஆர்ப்பாட்டக்காரர்களின் தீவிரம், பற்றுறுதி ஆகியவை கண்ட நான் அவர்கள்மேல் அனுதாபம் வைத்தேன். அவர்களுடன் முற்றாக என்னால் உடன்பட முடியாதது வேறு விசயம்.

கேள்வி:- இந்தியக் கம்யூனிசம் சிபிஐ, சிபிஎம் என இரு பிரதான கட்சிகளாக உடையக் காரணம் என்ன? சீன சோவியத் தகராறின் எதிரொலிதானா அது? சிபிஐ தன் இரு கோட்டைகளான கேரளாவையும் மேற்கு வங்கத்தையும் சிபிஎம்.மிடம் இழந்து விட்ட நிலையில், பிளவு சிபிஐ.க்குள் என்ன தாக்கங்களை ஏற்படுத்தியது?

பதில்:- சிபிஐ-சிபிஎம் பிளவென்பது சீன-சோவியத் தகராறின் பிரதிபலிப்பு மட்டுமே என பலரும் நினைத்து எழுதியுள்ளார்கள். இது உண்மையல்ல. அதைவிடக் குறிப்பிடத்தக்கதான காரணி சீன இந்தியத் தகராறு பற்றிய நிலைபாடே ஆகும். ஏற்கனவே சொன்னது போல் எல்லை விவகாரத்தில் சீனநிலைபாடு பற்றிய சூஎன்லாயின் விளக்கத்தை நான் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. சிபிஐ, சீன நிலைபாட்டை எதிர்த்தது சரிதான் என்றே இன்றும் நான் நம்புகிறேன். இருப்பினும் சீன நிலைப்பாட்டை ஆதரிக்காதிருப்பது ஒன்று, தங்கள் நாட்டு முதலாளி வர்க்கத்தை ஆதரிப்பது வேறு. இரண்டுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் உள்ளது. சில சிபிஐ தலைவர்களின் அறிக்கைகளை வாசித்தால் அவர்கள் தேசிய வெறியர்களோ காங்கிரஸ் தலைவர்களின் உரைகளை அப்படியே ஒப்பிக்கிறார்களோ என்றே தோன்றுகிறது. 'மஞ்சல் அபாயம்! ' போன்ற இனவெறியான அவதூறுகளும் சீனத்தலைவர்கள் மீது தொடுக்கப்படுகின்றன. சீனாவைத் தாக்கியும் இந்திய முதலாளி வர்க்கத்தைத் தூக்கியும் டாங்கே எழுதியுள்ள கட்டுரைகள் மட்டுமீறினவாய் உள்ளன. ஸ்டாலினிய மரபுகளில் ஊறியவனுக்குக் கூட அவை குமட்டும். சிபிஎம் தோழர்கள் பலர் இதைக் கண்டு அருவெறுத்தனர். அது சரியே. ஆனால் இவ்விவகாரம் கூட உடைவுக்கு முதன்மைக் காரணமல்ல. சீன-இந்திய எல்

படிப்பகம்

www.padippakam.com



சீன-இந்திய எல்லைமோதல்கள் நடந்து சில ஆண்டுகள் கழிந்து 1964ல் தான் கட்சி உடைந்தது.

தேர்தல் கூட்டுகள் சம்பந்தமாகக் கட்சிக்குள் நிலவிய கருத்து மாறுபாடுகளே, உடைவுக்கு முதன்மைக் காரணம் என்பது எனது கருத்து. கேரள அமைச்சரவை கவிழ்க்கப்பட்டதிலிருந்து கூட்டாளிகள் பற்றிய விவாதம் நடந்து வந்தது. 1964-ல் அது ஒரு முடிவை அடைந்தது. 1960 முதல் 64 வரையிலான கட்சி ஆவணங்களை நாம் ஆராய்ந்தால் பிளவின் உண்மைக் காரணங்களை நாம் கண்டுகொள்ள முடியும். இந்த ஆவணங்களில் நெடுக ஒரு குறிப்பிட்ட தன்மை பரவிக் காணப்படும். அதுதான் பாராளுமன்றக் குறுகல் வாதம். இவ்விசயத்தில் இரு தரப்புகளுக்குமிடையில் பெரிய வித்தியாசம் இல்லை. 'மாநிலங்களில் அதிகத் தேர்தல்களிலும் மக்கள் சபையில் அதிக இடங்களிலும் வெல்லும்' அவசியம் என்ற விசயத்தில் இருசாராருக்கும் கருத்தொற்றுமை உண்டு. அதாவது இந்தியாவில் இதுவே கம்யூனிசத்துக்கான பாதை. இத்துடன் சேர்ந்த துணைமுழக்கம் 'காங்கிரஸ் ஏகபோகத்தை உடைத்தெறிவோம்' என்பது. இதில்தான் கருத்து வேறுபாடுகள் வந்தன. காங்கிரஸ் ஏக போகத்தை உடைப்பதே பிரதானம்-ஆனால் ஜனசங்கம் அல்லது முஸ்லீம் லீக் போன்றன பங்காளிகளாகக் கொண்டாலும் பரவாயில்லை என்பது கட்சித் தலைவர்கள் சிலரின் கருத்து. ஏகபோகத்தை உடைக்க சிறந்த வழி, காங்கிரசுக்குள்ளேயே உள்ள வலதுசாரிகளுக்கு எதிரான முற்போக்கான காங்கிரசாருடன் கூட்டுச் சேருவதேயாகும் என்பது மற்ற சிலரின் கருத்து. ஆக இருக்கிற அரசு அமைப்பைத் தூக்கியெறியச் சிறந்தவழி எது என்ற விவாதமல்ல, மாறாக அதிகப் பதவியிடங்கள் வெல்லச் சிறந்தவழி என்ன என்ற விவாதமே இந்தியக் கம்யூனிசத்தில் உடைவு ஏற்பட்டதன் காரணம். ஆயின் என் கருத்தில், நடைமுறைத் தந்திரத்தில் ஏற்பட்ட வித்தியாசங்களே பிளவு ஏற்பட்டதன் காரணமாகும்.

சீன-இந்திய உறவுப் பிரச்சனை; சோவியத் நாட்டின் கொள்கை பற்றிய மதிப்பீடு போன்ற பிற விசயங்களிலும் வேறுபாடுகள் இருந்தன. ஆனால் கட்சி உடைய முதன்மைக் காரணம் தேர்தல் உத்திகளைக் கையாள்வது பற்றிய வேறுபாடுகளே. உடனடிக்காரணம், டாங்கே கடிதவிவகாரம் ஆகும். 1924-ல் டாங்கே பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு நான் சேவை செய்யத் தயார் எனக் கடிதம் எழுதியதாய் சொல்லப்படுகிறது. இதன் நகல் தேசிய ஆவணக் காப்பகத்தில் இருந்தது. இதனைப் பற்றி ஆராய சிபிஐ தேசியக் கவுன்சில் ஒரு விசாரணைக் குழுவை நிறுவியது. குழுவின் பெரும்பாலார் கடிதம் போலியானது, டாங்கே குற்றமற்றவர் என்றனர். சிறுபான்மையர் டாங்கே அந்தக் கடிதத்தை எழுதவில்லை என்பதற்கு சான்று எதுவுமில்லை என்றனர். கவுன்சிலின் 32 உறுப்பினர்களில் 1/3 பகுதியினர் கூட்டத்தை விட்டு வெளிநடப்புச் செய்தனர். பிறகு அவர்கள் திரும்பவே இல்லை. டாங்கேயின் கடிதம் என்பது வெளியேற அவர்களுக்கு ஒரு சாக்குதான் என்பது வெளிப்படை. அத்துடன் இரு சாராரிடையிலும் அடிப்படை வேறுபாடுகள் கிடையாது என்பதும் தெளிவு. அதுமுதல் இரு கட்சிகளும் பரிணமித்து வந்துள்ள விதமே இதற்குச் சாட்சி. தேசியக் கவுன்சிலில் சிபிஐ.க்கு அறுதிப் பெரும்பான்மை இருந்தபோது மாநிலக் கவுன்சில்களில் நிலைமை வேறுமாதிரியிருந்தது. மேற்கு வங்கத்தில் சிபிஎம்.முக்குப் பெரும்பான்மை. கேரளாவில் சிபிஐ பெரும்பான்மை விளிம்பில் இருந்தது.

www.padippakam.com



ஆனால் இத்தோடு நிறுத்துவதும் தவறான முடிவுகளுக்கே இட்டுச் செல்லும் ஏன் என்று சொல்கிறேன் கேளுங்கள்: மாநிலக் கவுன்சிலிலிருந்து மாவட்டக் குழுக்களுக்குச் சென்றீர்கள் என்றால் சிலவற்றில் சிபிஎம். மக்கே பெரும்பான்மை இருந்தது. அதற்கும் கீழ்மட்டங்களுக்குச் சென்றீர்கள் என்றால் சிபிஐ. யே இல்லாமல் போயிருப்பதைப் பாப்பீர்கள். கேரளாவில் அடிப்படை உறுப்பினர்களின் பெரும்பகுதி சிபிஎம், மில் சேர்ந்து விட்டது. ஆந்திராவிலும் ஏறக்குறைய இதே நிலைமை. மக்களியக்கத்தைக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதித்துப்படுத்திய இடங்களில் எல்லாம் சிபிஎம். முக்கே பலம் இருந்தது. இதற்குக் காரணம் என்னவென்றால் கட்சி உடைந்தபின் சிபிஎம் தலைவர்கள் பலரும் இடைநிலை ஊழியர்களும் (பின்வந்த ஆண்டுகளில் சிபிஎம் மிலிருந்து முறித்துக் கொண்டு பீகிங்கைச் சார்ந்து நின்றவர்களும்) உடைவு ஏற்பட்ட காரணத்தை பின்வருமாறு சொன்னார்கள்-அதாவது 'சிபிஐ. காரர்கள் 'வலது' கம்யூனிஸ்டுகள். இவர்கள் தேர்தலில் வெற்றிகள் மூலம் சீர்திருத்தங்கள் பெறுவதற்காகப் போராடுபவர்கள். சிபிஎம். தான் புரட்சிக்காக நிற்கிறது." சிபிஎம், மின் இடைநிலை ஊழியர்கள் பலரும் இதை நம்பியே சொன்னார்கள். ஆனால் சிபிஎம் தலைமை புரட்சியில் ஈடுபடவில்லை. தேர்தல் வெற்றிகளுக்கே முனைந்து நின்றது. 1967-ல் மேற்குவங்கத் தேர்தலில் அவர்கள் வெற்றிபெற்றபின் அவர்கள் நடந்துகொண்ட முறை இதை மிகத் தெளிவாதகத் காட்டியது. ஆனால் உடைவுக்குப் பின் சிபிஎம். மில் சேர்ந்த பெரும் திரளினர் அக்கட்சி அவர்களைப் புரட்சிக்கு இட்டுச் செல்லும் என மனமார நம்பியே சேர்ந்தார்கள். சிபிஐ, சிபிஎம் இரண்டின் வழியையும் எதிர்த்தவர்களும்; சிபிஎம். மிலேயே சேர்ந்தனர். காரணம் ஒன்றாயிருந்த கட்சியின் புரட்சிகரமான அடிப்படைப்பிரிவினர் பெரிதும் அக்கட்சிக்கே போய்விட்டதால் அதற்குத்தான் ஆற்றல் அதிகம் என நம்பினர். ஆக கம்யூனிஸ்டுப் பாரம்பரியமுள்ள பகுதிகளில் எல்லாம் அவிகள் பெரிதும் சிபிஎம். முடன் சேர்ந்து கொண்டன.

கேள்வி:-ஆமாம், நீங்கள் ஏன் சிபிஐ. யிலேயே இருக்கத் தீர்மானித்தீர்கள்?

பதில்:- நான் கட்சி உடைவதை விரும்பவில்லை. இருகுழுக்களுக்குமிடையில் எந்த வேறுபாடும் எனக்குத் தெரியவில்லை. கட்சி உடைந்தால் தொழிற்சங்க இயக்கமும் உடையும் என அஞ்சினேன். அதுவே நடந்தது. சிபிஎம் பிரிந்து போனபின் கொஞ்சக் காலத்தில் ஏஐடியுசி. யும் உடைந்தது. விவசாயிகள் சங்கங்கள் உடைந்தன. மாணவர் சங்கங்கள் உடைந்தன. இது இடதுசாரிகளை அதிகமாய் பலவீனப்படுத்தியது. இதனால் காங்கிரசும் பிற வலதுசாரிகளும் மக்களிடையே பிடிப்பு ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. தொழிலாளர் இத் தொழிலாளர் இயக்கம் இப்படி நிரந்தரமாய்ப் பிரிந்தே போகவேண்டுமென்ற வாதம் கண்டனத்துக்குரியதாகும். தொழிற்சங்க ஒற்றுமை சம்பந்தமான பெரிய பெரிய விஷயங்களை விடுங்கள், குறைந்த பட்சம் இருகட்சிகளும் 'தாங்கள் எந்த வர்க்கத்தின் நலன்களுக்கு சேவை செய்வதாய் கூறுகின்றனவோ அந்தப் பாட்டாளி வர்க்கத்தின் நலன்களை முன்னிட்டாவது தொழிற்சங்க அமைப்பைப் பொதுவானதாய் வைத்திருக்கக் முடியும். இதை அவர்கள் செய்யாததற்கு அவர்களின் குறுங்குழுவாதமே காரணம் என்று மட்டும் சொல்லி விடுவது விளக்கமாகாது. தேர்தல்வாதத்துக்கு அவர்கள் முக்கியத்துவம் தந்ததும் பாராளுமன்றத்துக்குப் புறம்பான போராட்டங்களைப் பாராளுமன்றத்துக்குக் கீழ்ப்படுத்தி விட்டதும்தான் தொழிற்சங்கத்தை அவர்கள் உடைத்துக் கொள்ளக் காரணமாகும். ஏனெனில் தேர்தலில் ஆதரவு கிடைக்க தமக்கென தனித்தனி தொழிற்சங்கம் முதலானவை அவர்களுக்கு தேவைப்பட்ட...

படிப்பகம்

www.padippakam.com



இவ்வாறு இருகட்சிகளும் தொழிற்சங்கம், மாணவர் சங்கம், உழவர் சங்கம் ஆகியவற்றைத் தமக்குள் பங்கு போட்டுக் கொண்டது முதன்மையாய் அவர்களின் தேர்தல் நலன்களுக்குத்தான். ஒவ்வொரு முனையிலும் வர்க்க எதிரிக்கெதிரான வர்க்க ஒற்றுமையைச் சாதித்தல் என்ற அடிப்படையிலான தத்துவமே அவர்களின் அரசியலில் இல்லாமல் போய்விட்டது. எப்படியும் சிபிஐ. யிலிருந்து பிரிந்து சிபிஎம். மில் சேருவதற்கான எந்த அத்தியாவசியமும் எனக்குத் தோன்றவில்லை. இன்றும் நான் சிபிஐ. யிலேயே உறுப்பினராயிருக்கிறேன். நான் எடுத்த முடிவு சரிதான் என்றே கூறுவேன்.

கேள்வி:- செக்நாட்டில் சோவியத் யூனியன் படையெடுத்ததுபற்றி சிபிஐ. தலைமைக்குள் சர்ச்சை எழுந்தது. சிபிஎம். சந்தடியின்றி படையெடுப்பை ஆதரித்தது. சிபிஐக்குள் அதற்கு எதிர்ப்பு இருந்தது என்றும் இதற்குக் காரணம் இந்தியாவிலிருந்த 'ஜனநாயகக்கூட்டாளிகளுக்கு மனத்தாங்கல் ஏற்படுத்திவிடக்கூடாது' என்ற விருப்பம் அல்ல என்றும் கேள்வி. இதுபற்றி...

பதில்:- 1968-ல் தேசியக்கவுன்சில் ஏகமனதாய் ஒரு தீர்மானம் இயற்றியது. டுப்செ(10) ( ) மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அங்கீகரித்தும், மனிதமுகத்துடன் கூடிய சோசலிசத்துக்கு தமது ஆதரவை வாக்களித்தும் அத்தீர்மானம். பின் சோவியத் நரட்டு ராணுவம் தலையிட்டது. உடனடியாக எங்களிடையே விவாதம் துவங்கியது. எங்களில் பலர் செக்கோஸ்லோவேகியக் கம்யூனிஸ்ட் கட்சிபற்றிய அனைத்துத் தகவல்களையும் சேகரிக்க புதுடில்லி செக்கோஸ்லோவேகியத் தூதரகத்துக்குச் சென்றனர். தேசியக் கவுன்சில் உறுப்பினர்கள் சரிசமமாகத் தரப்பு பிரிந்து நின்றனர். சோவியத் நாட்டை ஆதரித்தோர் 35 பேர். நாங்கள் 34 பேர் (உறுப்பினர் பெரும்பாலோர் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை). 2பேர் நடுநிலை விவாதம் தொடர்ந்தது. வாக்களிக்காதிருந்த 2பேர் எங்கள் பக்கம் வந்தனர். சோவியத் தலையீட்டை எதிர்த்த அணி பெரும்பான்மையாயிற்று. தாம் தோற்கடிக்கப்படுவோம் என்பதைக் கட்சித் தலைவர்கள் உணர்ந்து கொண்டனர். உடனே இறங்கி வந்தனர். உடனடி வாக்கெடுப்பு வேண்டாம் கட்சி முழுவதும் 3மாத விவாதம் நடக்க விடுவோம், சம்பந்தப்பட்ட ஆவணங்கள் யாவற்றையும் சுற்றுக்கு விடுவோம், பிறகு பார்க்கலாம் என்றனர் கட்சி முழுவதிலும் இப்பிரச்சனை சம்பந்தமான அறிக்கைகள் யாவையும் பற்றி விவாதம் நடப்பது நல்லதுதானே என நினைத்து நான் சம்மதித்தேன். எங்களுக்கு நட்டமில்லை, விவாதம் நடப்பதோ ஆதாயம்தானே என நினைத்தேன். ஆனால் தலைமை தான் சொன்னபடி நடக்கவில்லை.

நான்கு மாதங்கள் கழித்து அடுத்த கவுன்சில் கூடியது. அச்சமயத்தில் சோவியத் நாட்டிலிருந்து ஆட்கள் வந்து குவிந்தவண்ணமிருந்தார்கள். அவர்களில் சிலர் என்னுடனும் வாதித்தார்கள். ஆனால் நான் துளியும் மசியவில்லை.. உண்மையில் நான் ஒரு புனைபெயரில் "செக்கோஸ்லோவாகியாவில் நடப்பதென்ன?" என்ற தலைப்பில் ஒரு பிரசுரத்தை வெளியிட்டேன். ஆனால் சோவியத் பாதையை எதிர்ப்பவர்கள் ஒரு கட்டுரையாளர்கூட சிபிஐக்கு எதிரி' என்ற தாக்குதல் வராதபடி தேர்ந்து கொண்டேன். என்னென்ன நெருக்கடிகள் பிரயோகிககப்பட்டதோ எனக்குத் தெரியாது கவுன்சில் கூட்டத்தில் கட்சியந்திரம் தன்சக்திகள் அனைத்தையும் திரட்டியது. பெரும்பான்மை பெற்றது. அதன்பின் உடனடியாக புத்தகம் பற்றி என்னிடம் விசாரித்தார்கள். நான்தான் பொறுப்பு என ஒத்துக்கொண்டேன். என்னைக் கண்டி

www.padippakam.com



என்னைக் கண்டித்தார்கள். என் நூலை சிபிஐ உறுப்பினர்களுக்கு விநியோசிப்பதோ சிபிஐ.யினர் அதைப் படிப்பதோ கூடாது என உத்தரவு அனுப்பப்பட்டது. கட்சிப் பத்திரிகையில் நான் பகிரங்கமாகக் கண்டிக்கப்பட வேண்டும் என கருத்துக் கூறப்பட்டது. -இல் கண்டனம் வெளியிடப்படும் முன்பாக மீண்டும் சிந்தித்து 'நல்ல முடிவு' எடுக்க எனக்கு 15 நாள் கெடுவைக்கலாம் என கட்சித் தலைவர் ஒருவர் யோசனை சொன்னார். புனராலோசனை செய்ய உங்களுக்குத்தான் தரவேண்டும் அவகாசம் என்றேன் நான் இருப்பினும் 15 நாட்கள் அவகாசம் தந்தார்கள். இடையில் சிலர் என்னிடம் வந்து "தப்புதான்" என ஒத்துக்கொள்ள வற்புறுத்தினார்கள். பகிரங்கமாய் என்னைக் கண்டனம் செய்யத் தாங்கள் விரும்பவில்லை, ஏனெனில் நான் கட்சியில் ஒரு தலைவன் என்பதோடு செல்வாக்குமுள்ளவன் என்பதைச் சொன்னார்கள். நான் ஒரேயடியில் மறுத்து விட்டேன். ஆனால் மறுநாளே எல்லா முதலாளிய பத்திரிகைகளும் சோவியத் படையெடுப்பை விமர்சித்து நூல் எழுதியதற்காக நான் கண்டிக்கப்பட்டது பற்றி விஸ்தாரமாய் செய்தி வெளியிட்டுவிட்டன! இதனால் மொத்த விவகாரத்தையும் எமது கட்சித் தலைவர்கள் புறக்கணித்திருந்தால் நூல் எவ்வளவு பிரதிகள் விற்றிருக்குமோ அதைவிட அதிகப் பிரதிகள் விற்றுப் போயின. இதெல்லாமிருக்க, சிபிஐக்குள் விவாதம் நடைபெற்றது என்பதைக் குறித்துக் கொள்ளுதல் இங்கு போதுமானது. சிபிஎம்.மினர் முழுமனதாக படையெடுப்பை ஆதரித்தார்களே.

கேள்வி:- டிராட்ஸ்கியம் பற்றியும் டிராட்ஸ்கி பற்றியும் உங்கள் கருத்தைக் கூறுவீர்களா?

பதில்:- நான் டிராட்ஸ்கியன் அல்லன். ஸ்டாலினே எனது வழிபாட்டுத் தெய்வமாயிருந்தவர். அந்த விக்கிரம் சுக்கு நூறாய் உடைந்து போனது. அதற்குப் பதிலாக உடையாத புதிய விக்கிரகம் வேண்டுமென நான் விரும்பவில்லை. ஏனெனில் இப்போது சிலைவழிபாட்டில் எனக்கு நம்பிக்கை இல்லை. டிராட்ஸ்கி, புகாரின், ரோசா, லக்சம்பர் கிராம்சி, லூகாக்ஸ் இன்னபிற மார்க்சியரை எல்லாக் கம்யூனிஸ்டுகளும் சிரத்தையாய் படித்து விமர்சனப்பூர்வமாய் மதிப்பிட்டுக் கொள்ள வேண்டுமென நினைக்கிறேன். உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வரலாற்றிலிருந்து இவர்களைக் கழித்துவிட்டோமென்றால் மார்க்சியம் ஏழ்மைப்பட்டுப் போகும். டிராஸட்ஸ்கி ஏகாதிபத்திய ஒற்றன், பாசிசக் கைக்கூலி என்ற ஸ்டாலினிய வரலாற்றுத் திரிபை நான் நம்பவில்லை. இத்தகைய கருத்துக்களை இன்று சோவியத் வரலாற்றாளர்களே கைவிட்டு வட்டார்கள் எனத் தோன்றுகிறது. 60களின் பிற்பகுதியில் சிபிஎஸ்யு வெளியிட்ட புதிய வரலாற்றில் டிராட்ஸ்கி பாசிச ஒற்றன் என்பதற்காக அல்ல, 'சரியான பார்வை இல்லாதவர்' என்பதற்காகவே விமர்சிக்கப்படுகிறார். இந்த மாற்றமும் போதியதல்ல. லூகாக்ஸ் சொன்னது போல், ரஷ்யப் புரட்சியில் டிராட்ஸ்கியின் பாத்திரத்தைப் புரிந்து கொள்ளாவிட்டால் ரஷ்யப் புரட்சியின் வரலாற்றையே புரிந்து கொள்ள முடியாது. ரஷ்யப் புரட்சியின் கொந்தளிப்பான நாட்களையும் அதில் டிராட்ஸ்கியின் பங்கையும் பற்றிய அருமையான சித்திரத்தை ஜான் ரீடின் 'உலகைக் குலுக்கிய பத்து நாட்கள்' தருகிறது. அந்நூல் சமீபத்தில் சோவியத் நாட்டிலிருந்து லெனினின் முன்னுரையுடன் வெளிவிடப்பட்டதை அறிந்து மகிழ்ந்தேன். 1923-ல் ல்

வந்த அதிகாரவர்

படிப்பகம்

www.padippakam.com



1923-ல் -ல் வந்த அதிகாரவர்க்கமயமாதல் பற்றிய டிராட்ஸ்கியின் கட்டுரை ,மார்க்சியத்தைக் காப்போம் ( ), 'கலை இலக்கியம் பற்றி, ரஷ்யப் புரட்சியின் வரலாறு போன்ற அவரது நூல்கள் முக்கியமான பங்களிப்புகள், மதிப்புக்குரியவைகள். அவரது சில கருத்துகள் இன்றைக்கும் பொருந்துபவை இதன் பொருள் டிராட்ஸ்கியின் எல்லா எழுத்துடனும் சொல்லுடனும் நான் உடன்படுகிறேன் என்பதல்ல. விமர்சனப் பார்வை மார்க்சியத்தின் வளர்ச்சிக்குத் தேவை.

கேள்வி:- 40 ஆண்டுகளுக்கும் மேலாக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் நீங்கள் ஈடுபட்டுள்ளீர்கள். பாராளுமன்றத்தில் பிரதிநிதியாயிருந்திருக்கிறீர்கள். சகோதரக் கட்சியின் காங்கிரசுகளுக்குப் பிரதிநிதியாகச் சென்றிருக்கிறீர்கள் அதன் விவாதங்களில் பங்கு பற்றியிருக்கிறீர்கள். கம்யூனிஸ்ட் இயக்கம் பெரும் வெற்றி பெற்ற இருபகுதிகளில் கேரளா ஒன்று. அங்கு அக்கட்சியின் அடித்தளங்களைக் கட்ட உதவியதில் உங்கள் முன்னோடிப் பாத்திரம் பற்றி சொல்ல வேண்டியதில்லை. சிபிஐ, சிபிஎம், பிளவு பட்டுள்ள எம்எல் குழுக்கள் ஆகியவற்றை மரபு இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கம் என நான் பொதுமைப்படுத்திக் கொள்கிறேன். இந்த மரபு இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கம் தனக்குள் வேற்றுமைகள் கொண்டிருந்தாலும் பொதுவான அரசியல் சித்தாந்த அடிப்படை கொண்டதாயுள்ளது. இவ்வியக்கத்துக்கு எதிர்காலம்-இந்தியாவில்-இருக்கிறது என நினைக்கிறீர்களா? வேறுவிதமாகக் கேட்டால் இந்தக் கட்சிகளையும் குழுக்களையும் சீரமைத்துவிட முடியுமா அல்லது புத்தம் புதிய வகைக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்று தோன்றுதல் தேவையாகுமா?

பதில்:- இந்தியக் கம்யூனிசத்தின் கடந்த காலம் முழுவதையுமே மறுத்துவிட வேண்டும் என்ற பார்வையை நான் எதிர்க்கிறேன். பல தவறுகளும் திரிபுகளும் நடந்திருந்தாலும் சோசலிசத்துக்காகவும் புரட்சிக்காகவும் போராடி சகலவிதத் துன்பங்களையும் ஏற்று அனுபவித்த லட்சக்கணக்கான கம்யூனிஸ்டுகள் இந்தியாவில் இருந்திருக்கிறார்கள். அநேக உழவர் போராட்டங்களையும் தொழிற்சங்கப் போராட்டங்களையும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களையும் நடத்தியவர்கள் அருமையான கம்யூனிஸ்ட் போராளிகளே ஆவர். துயரத்துக்குரிய சேதி என்னவென்றால் தலைமையர்தான்-நான் மேலே குறிப்பிட்ட காரணங்களால்- தம் திறமைகளையும் ஆற்றல்களையும் புரட்சிகரத் திசைநோக்கி ஒருங்கு திரட்ட முடியாதிருக்கிறார்கள். ஆகவே பழைய அனுபவம் முழுவதையும் அப்படியே புறந்தள்ளி விடமுடியாது என்பதை வலியுறுத்துகிறேன். எந்தப் புதிய கம்யூனிஸ்டு இயக்கமும் மீண்டும் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய அத்தியாயங்கள் அவ்வரலாற்றில் உண்டு. சிபிஐ, சிபிஎம், எம்எல் குழுக்கள் ஆகியவற்றின் அடித்தளத்தில் சோசலிசப் புரட்சியை விரும்பி அதற்கே தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். இவர்களை நாம் புறக்கணித்து விடக்கூடாது. இவர்களில் மக்கள் போராட்ட அனுபவங்களைப் பெற்றவர்கள். மரபுக்கட்சிகளின் ஸ்டாலினியத்தைச் சுவைத்தறியாத தீவிரவாத இளைஞர்கள் பலரும் மார்க்சியம்-லெனினியத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். மார்க்சியம்-லெனினியத்தின் அடிப்படையில் நாட்டிலுள்ள அனைத்து கம்யூனிசச் சக்திகளையும் ஒன்றுபடுத்துவதே கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வ

படிப்பகம்

www.padippakam.com



கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வளர்ச்சிக்கு அடிப்படையானதாகும் என்பது என் அழுத்தம் திருத்தமான நம்பிக்கை. இதை எப்படிச் சாதிப்பது, ஒரு கூட்டு விவாதத்தின் மூலம் இவ்வனைத்துச் சக்திகளையும் புதிய பெயரின் கீழே ஒன்றுதிரட்டிக் கொள்வதா, அல்லது புத்தம் புதிதாய் ஒரு கம்யூனிஸ்ட் கட்சி தோன்றி தீரவேண்டுமா போன்றவற்றை வரலாற்றின் பதிலுக்கு விட்டுவிடலாம். ஒவ்வொருவரும் மற்றவரைத் தாக்கிக் கொண்டிருப்பதன் மூலம் ஒற்றுமை வந்துவிடாது. கோட்பாடு ரீதியான விவாதங்கள், தோழமையுடன் கூடிய வாதங்கள், பொதுவாக அங்கீகரிக்கப்படும் திட்டத்துக்கான ஒன்றுபட்ட செயல்பாடுகள் மூலம்தான் ஒற்றுமை சாத்தியம். வெவ்வேறு கம்யூனிஸ்ட் கட்சிகளில் அணிகளும் தம் கோட்பாட்டறிவை முயன்று உயர்த்திக் கொண்டு இப்பெரும் விவாதத்தில் பயனார்ந்த முறையில் பங்கு கொண்டால் இப்பெரும் விவாதத்தின் பயனார்ந்த மட்டும்தான், மேற்படி சாத்தியப்பாடு வெற்றிபெற முடியும். நான் ஒரு நம்பிக்கைவாதி. எனவே வயசாகிப் போன பழைய தலைமுறைத் தலைவர்கள் இக்கடமையில் தவறிவிட்டமலும், இளந்தலைமுறையின் புதிய புரட்சியாளர்கள் நிலைமையுணர்ந்து செயல்படுவார்கள் என நான் உறுதியாய் நம்புகிறேன்.

---------------

படிப்பகம்